உ

சிவமயம்



கிளிநொச்சி குஞ்சுப்பரந்தனை பிறப்பிடமாகவும்,
சாவகச்சேரி கெருடாவிலை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் சோகேஸ்வரன் கஜேந்தன் (கயன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கிளிநொச்சி -குஞ்சுப்பரந்தனை பிறப்பிடமாகவும்,
சாவகச்சேரி கெருடாவிலை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# சோகேஸ்வரன் கஜேந்தன் (கயன்)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**18.11.2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யாழ் பல்கலையில் இறுதியாண்டில்
வரலாற்றுத்துறையில் தேர்ச்சி கண்டு
யாழில் புகழ் பெற்ற ஆசானாய்
அனைவரின் மனங்களிலும்
நல்லிடம் பிடித்து
சிறு வயதினிலும் புகழ்பெற்று
பெருமகனாய் வாழ்ந்து
இறைபதம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களில்
இம்மலரை
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மலர்வு: 19 - 02 - 1989



உதிர்வு: 05 - 10 - 2013

அமரர்

# சோகேஸ்வரன் கஜேந்தன்

அவர்கள்

## திதி நிர்ணயம்

ஆண்டு விஜயமதில் புரட்டாதி மாதத்து
**பூர்வத்துப் பிரதமைத்** திதியில் - மாண்புடைய
**கஜேந்தன்** காசினியை விட் டகன்று
ஈசனடி யிணைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சோகேஸ்வரன் கஜேந்தன் அவர்களின்

# நடந்து வந்த பாதச்சுவடுகள்

கிளிநொச்சி மாவட்டம், வனப்பும் வளமிக்க பிரதேசமும் வயலும் வயல்சார்ந்த இடமுமாக பெருமளவில் மருதநிலப் பண்பைக் கொண்டது இது. கால்வாய்த் தண்ணீரால் களனிகள் செழித்து நிற்கும். அசைந்து வரும் காற்றினிலே நெற்கதிர்கள் தலையசைக்கும். மேட்டு நிலப் பயிர்களும் நாட்டுக்கு உயிர்கொடுக்கும். கிளிநொச்சி மாநகர் அழகான கிராமங்களைத் தன்னகத்தே கொண்டது. அவற்றுள் குஞ்சுப்பரந்தனும் ஒன்று. விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்டு பொருளா தாரத்தைப் படைக்கும் விவசாயிகளது குடும்பங்களைக் கொண்ட சிறிய கிராமம் அது அங்கமர்ந்து அருளாட்சி புரிகின்றாள் பொறிக்கடவை. கண்ணகை அம்மன் என்றால் தெரியாதவர்கள் இல்லை. அடியார்களின் அகத்திலும் புறத்திலும் நின்று பொறிக்கடவை கண்ணகி அம்மன் அருள் தந்து ஒளியேற்றுகிறாள்.

எம் பெருமாட்டியின் திருவருளால் திருமணபந்தத்தில் இணைந்து கொண்ட சோகேஸ்வரன் நாகறஞ்சினி தம்பதியினர் இல்லறமே நல்லறமாகக் கொண்டு இணைந்து வாழ்ந்த பெருவாழ்வால் பெற்றிட்ட பெருந்தவப் பயனாக 1989-ம் ஆண்டு மாசிமாதம் 19-ம் திகதி அருந்தவப்புதல்வனாம் சோகேஸ்வரன் கஜேந்தன் இம்மண்ணில் மகனாக வந்துதித்தான். பெற்றோரின் மனம்மகிழ குடும்பத்தில் மூத்த பிள்ளையாய் பிறந்த கஜேந்தன் தனது படிப்புக்கான அத்திவாரத்தை இட்ட இடம் தனது கிராமத்தில் கல்வியறிவு பெற்ற உத்தமர் பலரை உரமாகக் கொண்ட கிளி/ பரந்தன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகும். பலமான அத்திவாரம் அவரது கல்விக்கு பல தடைகள் வந்த போதெல்லாம் கல்வியை இடைவிடாது தொடர பெருந்துணை சேர்த்தது.

யுத்த நெருக்கடியால் குடும்பம் இடம் பெயர வேண்டிய நிலை. தனது குலதெய்வத்தையும் அழகிய கிராமத்தையும் விட்டுப்பிரிய மனமில்லாத நிலையில் பெருஞ் சோகத்தைச் சுமந்த வண்ணம் இவரது குடும்பம் 1997-ம் ஆண்டு கடல்வழியாக வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து சாவகச்சேரி என்ற பெரும்பகுதியிலுள்ள தந்தையாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிடமாகிய கெருடாவில் என்ற சிற்றூரை வந்தடைந்தனர். வந்தது முதல் தனது இருப்பிடத்திற்கு அண்மையில் கல்விக்கு வித்தாய் விளங்கும் யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் கஜேந்தன் தரம் மூன்றில் இணைந்து ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்தார். தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு பரீட்சையின் வெட்டுப் புள்ளியைத் தொடாத போதும் அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொடுத்தது. அதனால் இடைநிலைக் கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தொடர வாய்ப்பாக அமைந்தது. இவ்வேளை கெருடாவில் கிராமத்தில் இவரது குடும்பம் நிரந்தரமான வதிவிடத்தையும் அமைத்துக் கொண்டது.

காலச் சக்கரத்தில் யுத்த நெருக்கடியால் கஜேந்தனின் குடும்பத்தில் வறுமை நிலை தீவிரமடைய அவரது கற்றல் செயற்பாட்டை அது பெரிதும் பாதித்தது. மேலும் யுத்த நெருக்கடி கஜேந்தனை நெல்லியடிக்கு இடம் பெயர வைத்தது. இக்காலத்தில் கல்வியை இடைவிடாது தொடர யா/நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் ஆதரவுக்கரம் நீட்டியது. அங்கு கல்வியைத் தொடர்ந்தார். யுத்த நெருக்கடி ஓரளவுக்குக் குறைய திரும்பவும் சாவகச்சேரி கெருடாவிலில் தன் குடும்பத்துடன் மீளக்குடியமர்ந்தார்.

குடும்பத்தின் வறுமைச் சூழல் இவரது கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதகமாக(கவலையை அளிப்பதாக) இருந்த போதும் தனது கற்றலில் அது பின்னடைவை ஏற்படுத்தக் காரணமாக இருக்கக் கூடாது என்பதாலும் எனது குடும்ப வறுமையை கல்வியொன்றாலேயே தீர்க்க முடியும் என்ற உத்வேகத்தை மனதிலேற்றி கற்பதற்கேற்ற சூழலை மாற்றியமைத்து கல்வியின் மேம்பாட்டிற்கு வறுமை ஒரு காரணமல்ல என்ற பல மேதாவிகளின் கருத்தை தெளிவுற ஏற்றுக் கொண்டவரானார். இவ்வேளை அவரது சுயகல்விக்கு உந்துசக்தியாக இருந்தவர்கள் சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் தற்போது வசித்துவரும் திருமதி கு. கமலாதேவியும், தென்மராட்சிக் கல்விவலயத்தில் தற்போது வணிகத்துறையின் ஆசிரிய ஆலோசகராகப் பணியுயர்வு பெற்றுச் செயலாற்றிக் கொண்டிருக்கும் திருமதி. இராசேந்திரம் மகிலா அவர்களையும் குறிப்பிட்ட கஜேந்தன் நன்றிமறவாத் தன்மைக்கு நல்லதொரு உதாரண புருஷனாகிறனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.01-2009-ம் ஆண்டு வெளிவந்த உதயன் தினசரிப் பத்திரிகையில் "உயர்தரப்பரீட்சையில் சிறப்பான (3A) பெறுபேறு களைப் பெற்று யாழ் கல்வித்துறைக்கு புகழ்சேர்த்த மாணவர்கள்" என்ற தலைப்பில் எட்டாம் பக்கத்தில் வெளியான சாதனையாளர்களது எண்ணங்களை வெளிப்படுத்தும் சிறப்புப் பேட்டியில் ஆரம்ப நிலைக் கல்வியின் போது, அப்போது ஆசிரியராக இருந்த திருமதி இ.மகிலா அவர்கள் தமது வீட்டிற்கு அழைத்து பாடம் சொல்லிக் கொடுத்த நிகழ்வை நல்லதொரு குருசிஷ்ய நிகழ்வாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் க.பொ.த(சா/த) பெறுபேறு யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த(உ/த) கல்வியைத் தொடர வாய்ப்பளித்தது. இக்காலத்தில் தான் அவர் மனதில் உறைந்திருந்த கல்வித்தாகம் பலரது நல்ல நட்பின் தேடலுக்கு வழிவகுத்தது. இந்தவகையில் இவரது கல்வி நடவடிக்கைக்குகந்த நண்பர்கள் கிடைக்கப் பெற்றிருந்தார்கள் என்பதும் இவரது சிறப்புப் பேட்டியின் வாயிலாகப் பெறப்பட்ட உண்மையாகும். அயூரன், பிரசன்னா, டனுராஜன், நாகேந்திரன், தயூரன் போன்ற நண்பர் குழாம் கஜேந்தனின் சிறந்த நண்பர்களாக உயர்நிலை வகுப்பில் வழித்துணையாக இருந்திருக்கிறார்கள்.

அத்துடன் தன்னை உயர்தர வகுப்பில் கற்பித்தவரும் சிறந்த பெறுபேறான 3A யைப் பெற வழிவகுத்தவருமாக திரு. V.V. விஜயரூபன் ஆசிரியர் அவர்களைக் குறிப்பிடுகின்றார். தனது சிறப்புப் பேட்டியில் கஜேந்தன் நல்லதொரு வழிகாட்டியாகச் செயற்பட்ட விக்கி என அன்பாக அழைக்கப்படும் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான திரு. V.V. விஜயரூபன் குருவாக இருந்து இவரை வழிப்படுத்தியமை இவரது வாழ்க்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்ததோடு தனது குருவோடு இணைந்து எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணைபுரிவேன் என்ற எண்ணங்கொண்டவருமாக இருந்து செயற்பட்டிருக்கிறார். கஜேந்தன் என்பதை அவரால் அளிக்கப்பட்ட சிறப்புப் பேட்டியின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்ட எண்ணங்களாகக் காணலாம்.

ஜெனந்தன், துவாராகா, துவாரகன், தரணிகா போன்றோர் கஜேந்தனின் உடன்பிறப்புக்கள். சகோதரரின் வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். வரலாற்றை ஒரு பாடமாகக் கொண்டு அத்துறையில் சிறப்புப்பெற வேண்டும். ஆசிரியராகச் செயற்பட வேண்டும் என்ற அவரது எண்ணம் நிறைவேறத் தொடங்கியது. யா/ தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் 2009-ம் ஆண்டு தொடக்கம் 2011-ம் ஆண்டுவரை வரலாற்று ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தம்பணிச் சிறப்பால் பல தனியார் கல்வி நிறுவனங்களில் தன்னை இணைத்துக் கொண்டார். இவ் இணைவு அவரது ஆசிரியத்துவப் பணியை மெருகூட்டியது மட்டுமன்றி சிறந்ததொரு வரலாற்றா சிரியனாக க.பொ.த உயர்தர மாணவர் மத்தியில் பரிணாமம் பெற வழிவகுத்தது. இந்த வகையில் ஆவரங்கால் குகன்கல்வி நிலையம், மல்லாகம் சித்திவிநாயகர் கல்விநிலையம், அளவெட்டி A.M.A கல்விநிலையம், கொடிகாமம் கலைத்தமிழ் கல்வி நிலையம், பருத்தித் துறை N.C.A கல்விநிலையம், உரும்பிராய் உயர்கலை வர்த்தகக் கல்லூரி, பரந்தன் N.M.A கல்வி நிலையம் என்பவற்றின் வரலாற்றுப்பாட முன்னணி ஆசிரியராக மிளிர்ந்து கொண்டிருந்தார். பரந்தனில் உருவான N.M.A கல்விநிலையத்தின் நிர்வாகியாக 2010 முதல் 2012 வரை செயற்பட்டு தான் பிறந்த மண்ணைக் கல்வியால் மேம்பட வைத்தவர் கஜேந்தன்.

பல்கலைக் கழகப் பட்டப்படிப்போடு தனியார் கல்வி நிலையங் களில் தனது வித்துவத்தை வெளிப்படுத்தியதாக மற்றும் பல முயற்சிகளை மேற்கொண்ட கஜேந்தன் தன் பெற்றோருக்கு விழுதாகி நின்றார். அவர்களது வாழ்க்கையில் குதூகலமும் ஏற்படத் தொடங்கியது. ஒரு சமூகத்தின் நகர்வுகளில் பல பாத்திரங்களை ஏற்று முன்னுதாரணமாகத் திகழ்ந்த கஜேந்தன் 05.10.2013 அன்று காலனின் பிடிக்குள் சிக்கி அகால மரணமடைந்த செய்தி காட்டுத்தீ போல பரவி எம்மையெல்லாம் கதிகலங்க வைத்தது. நம்பிக்கை, முயற்சி, முன்மாதிரி, இவற்றுக்கெல்லாம் இவர் மரணம் முற்றுப்புள்ளியே. என எமையெல்லாம் எண்ண வைத்த அமரர் கஜேந்தனின் இழப்பு எமது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

"மரணம் வாழ்வின் முடிவல்ல
மரணத்தின் பின்பும் வாழ்வுண்டு உயர்ந்தோருக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரொன்று சருகானது

கடந்த மாதம் எமது பல்கலைக்கழக சமூகம் குறிப்பாக வரலாற்றுத் துறை சந்தித்த மிகத்துன்பகரமான நிகழ்வு திரு.சோகேஸ்வரன் கஜேந்தன் அவர்களின் அகால மரணமாகும். இத்துன்பவியல் நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் எமது துறைக்கு வந்து தன்னை இறுதி வருட மாணவனாக மீள்பதிவு செய்தபோது, அவர் எமது துறையில் கூறிய இனிய வார்த்தைகள் எம் நினைவைவிட்டு அகல முன்னர் அவரின் அகால மரணம் பற்றி செய்தி வந்தமை எமது துறைக்குப் பேரிடியாக அமைந்தது. அமரர் கஜேந்தன் வாகனவிபத்தில் அகால மரணத்தை சந்தித்த அதே புத்தூர் வீதியில் 2011-ல் எமது கிராமத்து எட்டாம் வகுப்பு பாலகன் வாகன விபத்தில் அகால மரணம் அடைந்தபோது அப்பாலகனின் ஆசிரியராக அமரர் கஜேந்தன் மரணவீட்டில் கலந்து கொண்டு அவரின் பெற்றோருக்கு ஆறுதல் கூறியதை நேரில் கண்டவன். இன்று அதே வீதியில் திரு. கஜேந்தன் அகாலமரணமடைந்த செய்தி எமது கிராமத்திற்கே பேரிடியாக இருந்தது.

அமரர் கஜேந்தன் தனியார் கல்லூரிகளில் கற்பித்தலையும், பல்கலைக்கழகத்தில் கற்பதையும் இரு கண்களாகக் கொண்டவர். அவர் பல்கலைக்கழகத்தில் பிரபல்யம் பெற்றதைவிட பாடசாலை மாணவ சமூகத்தின் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஒருவர். அவரது ஆசிரிய வாண்மையால் தெல்லிப்பளை, வடமராட்சி, தென்மராட்சி, புத்தூர் போன்ற இடங்களில் நிலையான மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமைக்குரியவர். அதற்கு மரண நிகழ்வில் கலந்துகொண்ட மாணவ சமூகமே சாட்சியாகும். ஒரு பல்கலைக்கழக மாணவனுக்குரிய துடினமும், குறும்புத்தனமும் அமரர் சோ. கஜேந்தனிடம் காணப்பட்டாலும் பல்கலைக் கழக மாணவர்கள் பலரிடம் தோன்றாத குடும்ப பொறுப்பு இளமையிலேயே அவரிடம் காணப்பட்டது. அதனால் பல்கலைக்கழக மாணவர்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றார். அவரது மரண வீட்டிற்கு இரவு சென்ற வேளை அவரது பெற்றோரும்., சகோதரர்களும், உற்றாரும், உறவினரும் கதறியழுதபோது கூறிய வார்த்தைகள் எம்மால் சிறிதும் ஜீரணிக்க முடியவில்லை. அமரர் தனது பெற்றோரினதும், நான்கு சகோதரர்களினதும் நல்வாழ்வுக்காக இரவு பகல்பாராது கடுமையாக உழைத்த ஒருவர். அந்த நம்பிக்கை அவர் குடும்பத்தில் துளிர்விட்டு வளரும் நிலையில் அதற்கு உயிர் கொடுத்த திரு.கஜேந்தனை குடும்பத்தினர் இழந்து தவிப்பதற்கு ஆறுதல்கூற வார்த்தைகளே இல்லை. மரணம் தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் 23 வயதுப் பாலகனின் மரணத்தை நியாயப்படுத்தி ஆறுதல்கள் கூற வார்த்தைகளே இல்லை. அவரை இழந்துநிற்கும் நிலையில் யாருக்கு ஆறுதல் கூறுவது என எண்ணும்போது அதை நமக்கு நாமே கூறவேண்டிய நிலையில் உள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**
தலைவர்
வரலாற்றுத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந் நெஞ்சில் நிறைந்த

# ஆசிரியனும் அவனே! மாணவனும் அவனே!

கஜன் இன்று எம்மத்தியில் இல்லை. அவன் நினைவுகள் எம் நெஞ்சில் நிறைந்து இருக்கின்றன. அவன் பிரிவு அனைவரையும் கலங்கி உருகவைத்தது. அனைவருடனும் பணிவாகவும் இனிமையாகப் பழகுவதுடன் இன்முகம் காட்டி வரவேற்கும் பண்பையும் கொண்டவன். தம்பி கஜன் ஒரு வரலாற்றுக் களஞ்சியம். அவனின் மகோன்னதமான கற்பித்தலினால் உயர்நிலை அடைந்த மாணவர்கள் பலர். வரலாற்றுப் பாடப்பரப்பினை மிகத்தெளிவாகவும் ஒழுங்குமுறையிலும் என்னிடம் கற்ற மாணவர்களில் முதன்மையானவன் கஜன். அவனின் அதீத திறமையினை எவராலும் மதிப்பிடமுடியாது. மாணவர்களின் மேல் செலுத்தும் அக்கறை தனித்துவமானது. நல்லதொரு மாணவ சமூகத்தை உருவாக்கிக் கொண்டிருந்த துடிப்புமிகு இளம் ஆசிரியராக விளங்கியவன். அவனை எனது மாணவன் என்று சொன்னால் எனக்கே பெருமையாக உள்ளது. பலமுறை யோசித்து திடமான முடிவெடுக்கும் பாங்கு, முயற்சியில் விடாப்பிடி, எச்சந்தர்ப்பத்திலும் இன்சொல் பேசும் இயல்பு, உழைப்பில் அவாவும், செலவில் சிக்கனமும் மிக்க வாழ்வு, எச்செயலையும் திட்டமிட்டு சீர்தூக்கிப் பார்த்து செயலில் இறங்கும் துணிவு நிறைந்தவன். மாணவர்களுக்கு நல்ல ஆசிரியர், ஆசிரியர்களுக்கு நல்ல மாணவன் குடும்பத்திற்கு நல்ல தலைமகன் இன்று எம்மைவிட்டு மறைந்துவிட்டான்.

"நெருநெல்லுள னொருவன் இன்றில்லை யெனும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

எனும் வாக்கிற்கு அமைய வாழ்ந்த அவன் ஆத்மா சாந்தியடையட்டும்!

ஆசிரியர்.
**வீ. விஜயரூபன் (விக்கி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவாச் சகோதரனுக்கு.

சிறிய பாலகனாய் எம்முடன் இருந்த நாட்கள்
எம் கண்முன்னே வருகின்றது. சிரித்த முகத்துடன்
சிறிய சைக்கிளில் ஓடிவரும்அழகே தனி அழகு
என் அம்மாவின் அன்பிற்குரிய மகனாய் நீ இருந்தாய்.
கல்வியிலே உயர்வு பெற்று கல்விமானாய்
வருவாய் என பார்த்திருந்தவேளையில் கல்வெட்டு எழுதும்
துயரம் சொல்ல முடியவில்லை. உன் உயர்வு கண்டு
மகிழ்வு கொண்ட வேளையில் காலன் உன்னைப் பறித்துச் சென்றானே.
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

அம்மா, மகிலாக்கா குடும்பத்தினர்.

## மனங்களில் நிறைந்து தடயங்களில் நிஜமாக வாழ்பவன்..

நம் துறையின் சிட்டு ஒன்று
நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்ததுவாம்
காலனவன் கண்ணிற்கு
கரைந்து போனதுவாம்
வரலாற்றுத் துறையின் - நம் இறுதி வருடத் தோழனவன்
வளர்ந்த தோற்றமும், கனிவான பேச்சும்

கனத்த சுமைகளுடன் கல்வியில் பயணித்த
கஜேந்தனே! நம் மனங்களில் நியமாக
கலந்து விட்ட உந்தனுக்கு நினைவுமலர் எழுத முடியுதில்லையடா
பாவி யமன் உம் உயிரைக் கவர்ந்ததனால்
பாவியராய் உறவுகள் நாம் பரிதவித்துக் கதறுகின்றோம்.
பெட்டிக்குள் படுத்துறங்கி பாடையிலே போனாலும்
அழியாது உன் நினைவுகள் அகிலத்தில் எம்மை விட்டு.

வரலாறு கற்று வளமான எதிர் காலத்தை
வடிவமைப்பாய் என நாம் நினைக்க - எமன் தன்
சாதனைகளை சரிவர
சரித்திரத்தில் எழுதிவிட உன்னை அழைத்தானன்றே!

கனவுகள் பல சுமந்தவனின் கடைசி யாத்திரை
கரையேறி விட்டதுவோ! - கற்பனைகள் பல கொண்டு
கல்வியில் இறங்கியவனுக்கு
கடவுள் கொடுத்த பட்டமிதுவோ!

நிறைவான கனவுகளை சுமந்தவனின் தடங்களை
நியமாக்கிடத் துடிக்கிறது உள்ளங்கள்
அனைவர் மனங்களிலும் நிறைந்த
அன்பனே! நண்பா கஜேந்தன்.

உந்தன் ஆத்மா சாந்தி பெற
உயர்வான பரம் பொருளை நாளும் வேண்டுகிறோம்.

"பிறப்பவர் எல்லாம் இறப்பவர் எனினும்
சிறப்புயர் வுற்றோர் சிந்தையில் இருப்பர்"

4-ம் வருட நண்பர்கள்
வரலாற்றுத்துறை
யாழ்பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMA கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளத்திலிருந்து.......

"செயற்கரிய செய்வார் பெரியர்" அந்தவகையில் செயற்கரிய சேவை செய்து எம் மனங்களில் உயர்ந்து நிற்பவரே நம் ஆசிரியர் திரு. சோ. கஜேந்தன். இவ்வாறான எமது ஆசிரியரின் மரணச் செய்திகேட்ட அந்த நாள் எம் அனைவரது உள்ளத்திலிருந்து என்றும் மறைந்து விடாது. எம் ஆசிரியரை காலன் எம்மிடம் இருந்து பறித்துச்சென்று விட்டான் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

அவர் எமது கல்வி நிலைய ஆசிரியராக மட்டுமன்றி ஆசிரியர்களுக்கு நல்ல தோழனாகவும், மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கியவர். எப்படியும் வாழலாம் என்று பலர் இருக்க இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒழுக்கத்தோடு வாழ்ந்தவர் நம் ஆசிரியர். அவரிடம் வரலாறு பாடம் கற்ற பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். இவ்வாறு மாணவர்களை உலகிற்கு இனங்காட்டிவிட்டு தான் மறைந்து போகலாம் என்று நினைத்தார்போலும் நம் ஆசிரியர்.

பெண் மாணவிகளை 'அம்மா' எனவும், ஆண் மாணவர்களை 'அப்பன்' எனவும் அழைக்கும் வழமை உடையவர் அவர். அவரைப்பற்றி குறைகூறுவதற்கென்று ஒருவரும் இங்கில்லை. அதாவது புகழ் கூறுவோர் ஏராளம் பேருள்ளனர். ஆசிரியர் எமக்கு ஆற்றிய பணிக்கு நன்றிக்கடனைத் திரும்ப செலுத்த முடியாதவர்களாய் நாம் தவிக்கின்றோம். அவரது மாணவர்கள் சிறந்த வரலாற்று ஆசிரியர்களாக வடிவெடுத்து உலகிற்கு சேவையாற்றி அவரது புகழைப் பேசவேண்டும் என்பதே எமது அவா.

காலம் என்ற நதியின் ஓட்டத்திலே மாற்றம் ஒன்று தான் மாறாதது. அந்தவகையில் இவ்வுலகில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந் தாலும் ஆசிரியர் மீது நாம் கொண்ட பற்று என்றும் மாறப்போவதில்லை. அவரது நினைவுகளும் எம்மைவிட்டு நீங்கப்போவதில்லை. அவரது மறைவால் அவரது குடும்பத்தினர் உட்பட நாம் அனைவரும் துயருற்றிருக்கின்றோம். காலத்தை நொந்துகொண்டு எமக்கு நாமே ஆறுதல் கூறவேண்டியதுதான் இறுதியாக அவரது ஆசிகள் என்றென்றும் எமக்கு கிடைக்க வேண்டும் என்று கேட்டு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி
**A.M.A. கல்வி நிலைய**
**ஆசிரியர்கள், மாணவர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகன் கல்வி நிறுவனத்தினரிடமிருந்து..
# தம்பி கயனுக்கு ஒரு அன்பு இரங்கல்.

அமரர் தம்பி கயன் எங்கள் கல்வி நிறுவனத்தில் வரலாற்றுத் துறை ஆசிரியராக சுமார் ஐந்து வருடங்கள் சேவையாற்றியுள்ளார். சிறந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, கீழ்ப்படிவு, பாடப்பரப்பில் ஆழ்ந்த அறிவு கொண்ட தம்பி கயன் மாணவர்களுடன் பண்பாகப் பழகி நிர்வாகத்தினருடன் அன்பாகப் பழகிச் சேவையாற்றியவர். அன்னாரைப்பற்றி கல்வியுலகம் நன்கறியும் ஆனால் பெற்றோர், சகோதரர்கள், அயலவர்கள் இவருடைய புகழை விரைவாக அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் மரணம் சம்பவித்த போதும் இறுதிக் கிரியைகள் நடந்தபோதும் மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள் பல்கலைக்கழக சமூகத்தினர் திரண்டிருந்ததைக் கண்டு அதிசயமடைந்த துடன் மேலும் அவர்களை ஆழ்ந்த துயரத்தில் அமிழ்த்தியது. என்ன செய்வது இயமன் டிப்பர் வாகனத்தில் வந்து அவரின் உயிரைக் காவு கொண்டது. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

ஆவரங்கால். குகன் கல்வி நிறுவனத்தினர்.

## சிந்திக்க சிலநொடிகள்

* சிரமங்கள் வலியால் மட்டுமே சிகரங்கள் வழிதெரியும்.
உள்ளத்தின் காயங்களே வெற்றியின் உயரத்தைக் காட்டும்.

* நிஜங்கள் தரும் சுகத்தைவிட நினைவுகள் தரும் சுகம் அதிகம்.
நிஜங்கள் நிலைப்பதில்லை நினைவுகள் அழிவதில்லை.

* எந்த பொருளின் மீது உனக்கு ஆசை அதிகமோ
அந்தப் பொருளால் உனக்கு துன்பமும் அதிகம்.

* உன்னிடம் அன்பாகப் பேசும் பொய்யான உள்ளங்களை விட
உன்னிடம் உரிமையோடு சண்டை போடும் இதயங்களை நேசி.

* மரணம் என்பது ஒருநொடியில் உயிர் போக்கும். ஆனால்
பிரிவு என்பது ஒவ்வொரு நொடியும் உயிர் போக்கும்.

* சிலரைப்பற்றி அறியாமலே நாம் அவர்களை வெறுக்கிறோம்.
வெறுப்பதாலேயே அவர்களைப்பற்றி அறியாமல் இருக்கிறோம்.

* கோபப்பட ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால்
அவற்றில் ஒன்றும் சரியானதாக இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைவிட்டுப் பிரிவதற்கு இதுவா வயது?

கருவாய் அன்னை
வயிற்றில் தோன்றி
மண்ணில் உதயமாகும் பொழுது
எமக்கு மூத்தவனாய்
எம்மையெல்லாம் வழிநடத்தினீரே!
சின்னச் சின்ன
சண்டைகள்
சின்னச் சின்ன
குறும்புகள்
எல்லாவற்றிலும்
எம்மிடம் பகீர்ந்தீரே!
கஸ்ரத்தின் மத்தியில்
கஸ்ரப்பட்டு படித்து
"3A சாதனை"
படைத்தீரே!
ஆடம்பரச் செலவு பண்ணாமல்
அடக்க ஒழுக்கமாய்
வாழ்ந்தீரே!
படித்த படிப்பு
பட்டம் பெறுமுன்னே
ஆசிரியர் பட்டம்
பெற்றீரே!
திறமையின் உருவமாய்
பொறுமையின் வடிவமாய்
தலைநிமிர்ந்து
தன்னடக்கத்துடன்
வாழ்ந்தீரே!
எறும்பைப் போல்
சிக்கனம் பிடித்து
எம் கஸ்ரம் தீர
பாடுபட்டீரே!

ஆனால் இறைவனோ!
நாம் நல்லாய்
வந்திடுவோம் என்று
கடவுள்
எமதர்மனிடம்
கடைக்கண்ணை
காட்டினான் போலும்
அவனோ!
டிப்பர் உருவில்
வந்து எம்
அண்ணனை
எம்மிடம் இருந்து
பிரித்துச் சென்று
விட்டான்
நடந்த தெல்லாம்
கனவாகிப்
போனால் என்ன?
மீண்டும்
நீர் வந்து
எம்முடன்
உறவாட மாட்டீரா?
ஒரு தடவை
உம் புன் சிரிப்பை
பார்க்க மாட்டோமா?
மீண்டும் ஒரு தடவை
உம் முகம்
பார்க்க மாட்டோமா?
என்று தினம் தினம்
ஏங்கித் தவிக்கும்.

**பாசமிகு**
**சகோதர, சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் ஏக்கம்

ஆசை மாமாவே!
அன்போடு எமை அணைத்து
அறிவு பல கூறி
நானிருப்பேன் கலங்காதே
என நவின்ற மாமாவே!
காலமெல்லாம் எம்மோடு
களித்திருப்பாய் என்றிருக்க,
காலனவன் இடைநடுவில்
கவர்ந்துதான் சென்றானோ!
கலங்குகின்றோம் கதறுகின்றோம்
கண்ணீர் மழை சொரிகின்றோம்.
கரம் கொண்டு நீர் துடைக்க
ஆசைமாமாவே!
அருகில் நீ வாராயோ!
எமக்கு வழிகாட்ட எழுந்தோடி வந்துவிடு
என்றென்றும் எம் அருகில் துணையாய் நின்றுவிடு மாமா

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டிட்ட
கஜேந்தன் மண்ணுலகில் வாரார் ஈண்டிந்த உண்மையினை
உணர்ந்து நாமெல்லாம் வேண்டாம் துயரென்று
வேதனையைத் தவிர்த்திடுவோம்.

*01.* வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாமாக இருப்போம்.

*02.* ஒருவரை புரிந்து கொள்வது கடினம். புரிந்து கொண்டபின் பிரிந்து செல்வது மிகக்கடினம்.

*03.* பேசவேண்டிய நேரத்தில் அமைதியாக இருந்துவிட்டால் அமைதியான நேரத்தில் நிம்மதியாக இருக்கமுடியாது.

*04.* காலங்காலமாக பெண்களை கண்ணீர் சிந்த வைத்துகொண்டிருப்பது அன்று - உடன்கட்டை, இன்று - வரதட்சனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கஜேந்தன் அவர்கள்
இறுதியாக வெளியிட இருந்த
# கையேடு

## 1. அநுராதபுரம்

இராசரட்டை நாகரீக தலைநகர்களில் ஒன்றான இது இலங்கையில் முதன் முதலில் தோற்றம் பெற்ற இராசதானியாகவும் வரலாற்றின் முதல் தலைநகர் என்ற சிறப்பினையும் பெறுகின்றது. ஏறக்குறைய 1300 ஆண்டுகள் தலைநகராக இருந்த பெருமையைப் பெற்றுக் கொள்ளும் இவ்வரசு 'அபயபுரம்', விசாலபுரம், பரந்த நகர்" போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இது 'அனுராதகம' எனும் ஒரு குடியேற்றத்திட்டமாக காணப்பட்டதுடன் அனைத்து ஆரியக் குடியிருப்புக்களையும் ஒன்றிணைத்து அநுராதபுரத்தை நிர்மாணித்த பண்டுகாபய மன்னன் தன்னையே முதன் மன்னாக தெரிவு செய்து கொண்டான். குடியிருப்புக்களில் முதலில் இதுவே துரித பொருளாதார வளர்ச்சிக்குட்பட்டதும் இங்கேயே குடித்தொகை வளர்ச்சி ஏற்பட்டமையுமே அநுராதபுரம் தலைநகராகத் தெரிவு செய்யக் காரணமாகும். மல்வத்து ஓயாவை ஆதாரமாகவும் பாதுகாப்பு அரணாகவும் கொண்டு இந்நகர் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியமானதொரு இடம் இவ்வரசுக்கு உண்டு. அதாவது பௌத்தமரபானது ஆழமாக வேரூன்ற அடித்தளம் இட்டதுடன் பௌத்தக் கலை மரபுகள் பண்பாடுகள் தாதுகோபுரங்கள் முப்பெரும் விகாரைகளின் அமைவு மகாபோதி மரம் என்பன நிறுவப்பட்டு பௌத்தசமய வளர்ச்சியை ஏற்படுத்திய நகரமாக இது விளங்குகிறது.

நீர்ப்பாசனப் பொருளாதாரத்தில் பெரும்புரட்சியை ஏற்படுத்திய இராசதானியாக இது விளங்குகின்றது. அவ்வகையில் மல்வத்து ஓயா, கலாஓயா ஆகிய இரு நதிகள் மூலம் குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சியை பெற்றது. மல்வத்து ஓயாவை மறித்து பல குளங்களும் அமைக்கப்பட்டன. இவ்வரசின் கீழ் அபயவாவி, மின்னேரியா, கலாபள்ளுவாவி, கவுகுலுவாவி, குருளுவாவி, மகாவிலாச்சியா, திஸாவாவி, காமினி வாவி, நாச்சதுவவாவி முதலான குளங்கள் அமைக்கப்பட்டு நீர்ப்பாசனம் விருத்தியாக்கப்பட்டு விவசாயம் செழிப்புற்று காணப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தொன்மை நாகரீகம் தொடர்பிலும் முக்கிய இடம் பெறுகிறது. பழுங்கற்காலம், இடைக்கற் காலம் போன்றவற்றிற்குரிய வளர்ச்சி நிலைகள் இங்கு காணப்பட்டமைக்குரிய எச்சங்களும், தொல்லியல் சான்றுகளும் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும் தொன்மைக்காலம் முதல் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாக இது விளங்கியிருந்தது. இங்கு பல்வேறு நாட்டைச் சேர்ந்த நாணயங்களும் தென்னிந்தியா, வவுனியா, பெரிய புளியங்குளம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மூலமும் இந்நகரம் தொன்மைக் காலம் பெற்றிருந்த வர்த்தக முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

அநுராதபுர அரசின் பிற்பகுதியில் முரண்பாடுகள் பல ஏற்பட்டுக் கொண்டாலும் அது தாதுசேனன் போன்ற வலிமையான மன்னர்களால் முறியடிக்கப்பட்டது என வரலாற்று ஏடுகள் செப்புகின்றன. எனினும் 5-ம் மகிந்த மன்னன் காலத்தில் சோழரால் கைப்பற்றப்பட்டு இவ்வரசு வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டது.

"மனிதன் திரியாக எரிய முன்வராத வரை
அவன் தீபமாக ஒளிவிட முடியாது"

## 2. பொலநறுவை

இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தலை நகரங்களில் ஒன்றாக பொலநறுவை விளங்குகின்றது. 'புலஸ்திநகரும், கண்டவுருநுவர, பாசறை நகர், விஜயராஜபுரம், ஜனராதமங்களபுரம்" எனப் பல பெயர்களால் இவ்வரசு அழைக்கப்படுகிறது. அநுராதபுர காலத்து பிற்பட்ட அரசர்கள் பலர் தமது பாதுகாப்பு நகராகவும் தமது சேனைகளைத் தக்கவைத்து பயிற்சி வழங்கும் நகராகவும் இதனைப் பயன்படுத்தி இருந்தனர்.

இவ்வரசு அநுராதபுரம் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து சோழர்களால் தலைநகராக்கப்பட்டது. தமது வேந்தன் இராஜ இராஜ சோழனது விருதுப் பெயர்களில் ஒன்றாகிய 'ஜனநாதன்" என்னும் பெயரை நினைவுபடுத்தும் முகமாக 'ஜனநாத மங்கள புரம்' என்னும் பெயரை சூட்டினர். அநுராதபுர அரசை விட விவசாய நடவடிக்கைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக ஏற்ற இடமாகவும், பாதுகாப்பு நிறைவாகவும், கோகர்ண துறைமுகத்துடன் தொடர்பை விரைவில் ஏற்படுத்த முடிந்தமையுமே சோழர் பொலநறுவையை தலைநகராகத் தெரிவு செய்யக் காரணமாகும்.

இந்நகரின் வரலாற்று முக்கியத்துவத்தை நோக்கும் போது விஜயபாகு, பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்லன் என்ற மூவேந்தர் ஆட்சி சிறப்புப் பெறுகின்றது. இம்மன்னர்களில் சமய வளர்ச்சியின் பொருட்டு நகரத்தை செழிப்புடையதாக மாற்றியுள்ளது. ரண்கொத் விகாரை, தமிழ்தூபம், தெமழமகாசாய போன்ற பிரமாண்டமான விகாரைகள் நிறுவப்பட்டும் பராக்கிரமபாகு சமுத்திரம் போன்ற வியத்தகு நீர்ப்பாசன படைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டும் பௌத்தசமய வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சியும் இந்நகரில் ஏற்படுத்தப்பட்டது.

புராதன வைத்திய முறை வளர்ச்சியானது இந்நகரில் அவதானிக்கப்பட்டது. இங்குள்ள ஆலாஹனப் பிரிவனாவில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வராச்சிகளின்போது நவீன வைத்தியசாலை களுக்கு ஒத்த பெருமளவு வைத்தியசாலைகளின் பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட அறுவைச்சிகிச்சைக் கருவிகளும் மருந்து சேகரிப்புத் தாளிகளும் இக்கால மருத்துவ உயர்நிலையை எடுத்துக்காட்டும் தக்க சான்றுகள் ஆகும்.

கலை வரலாற்று வளர்ச்சியிலும் இது ஒரு முக்கிய தலை நகரமாகும். அரசமாளிகைகள், உத்தரராமய படிவங்கள் இந்துசமய சிற்பக்கலைகளைப் பொறுத்து கருங்கல்லில் அம்மிக்குளவிவடிவில் நிறுவப்பட்டுள்ளது. இங்குள்ள சிவன் கோவில்களின் சிவலிங்கங்கள் எல்லாம் கலைவளர்ச்சியை எடுத்துக்காட்டும் தக்க சான்றாகும்.

இவ்வாறாக பல வரலாற்று முக்கியத்துவத்தினை தன்னகத்தே கொண்டு விளங்கிய பொலநறுவை இராசதானியானது 1214-ம் ஆண்டு கலிங்கமாகனின் படையெடுப்பால் இவ்வரசு முற்றாக சிதைக்கப்பட்டது.

"ஒவ்வொரு நிமிடமும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையும், நேரமும் கடவுளிடமிருந்து வருவதாக நினை உன் வாழ்வில் சலிப்பு ஏற்படாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. தம்பதெனியா

பொலநறுவை இராசதானியின் பிற்பாடு இலங்கையின் தலை நகராக விளங்கிய பெருமை தம்பதெனியா அரசையே சாரும். குறுகிய காலம் இது தலைநகராக இருந்தாலும் இதன் வரலாற்றுச் சிறப்பு அதிகமாகும். வன்னி விஜயபாகு, வக்மி விஜயபாகு எனப் பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் 3-ம் விஜயபாகு மன்னனே இவ்வரசை தலைநகராகத் தெரிவு செய்து கொண்டான். எனினும் சிறந்த அரசியல் எழுச்சியை இவ்வரசனின் மகனான 2-ம் பராக்கிரம பாகுவே ஏற்படுத்திக் கொண்டான்.

2-ம் பராக்கிரமபாகு மன்னன் இவ்விராசதானியை மையமாகக் கொண்டு சிறந்த அரசியல் தன்மையை ஏற்படுத்தியிருந்தான். அதாவது மாகனின் படையை விரட்டியும் உருகுணை தவிர்ந்த ஏனைய இடங்களை கைப்பற்றியும் யாவா அரசன் சந்திரபானுவை தோற்கடித்தும் அரசியல் எழுச்சியை ஏற்படுத்திக் கொண்டதுடன் மகாவலிகங்கைக் கரையில் உபசம்பதாவிழாவை நடாத்தியதன் மூலம் சமய எழுச்சியையும் தம்பதெனியா அரசில் ஏற்படுத்திக் கொண்டான்

தம்பதெனியா இராசதானிக்காலம் இலக்கிய வளர்ச்சியில் புகழ்பூத்த காலம் ஆகும். வெதேகம தேரர், புத்தமித்ர தேரர், தர்மசேன தேரர் ஆகிய அறிஞர்கள் இக்காலம் வாழ்ந்ததால் இங்கு இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. 'கதிகாவத' என்ற ஒழுக்க நெறிக்கோவையை ஏற்படுத்தியதன் மூலம் 2-ம் பராக்கிரமபாகு மன்னன் பௌத்தசங்கத்தை தூய்மைப்படுத்தி இருந்தான். மேலும் இக்காலத்தில் பல பாளிநூல்களும் விளக்க உரைகளும் எழுதப்பட்டன. இதுவே பின்னர் கோட்டை இராசதானியில் இலக்கிய வளர்ச்சி ஏற்பட வழிகாட்டியாக அமைந்தது.

2-ம் பராக்கிரமபாகு மன்னன் தலைசிறந்த கல்விமானாக விளங்கியதுடன் பல கல்வியாலாளர்களை ஆதரித்து இலக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தினான். பூஜாவலிய சத்தர்மரத்தினாவலிய போன்ற நூல்கள் இக்காலத்தில் தோற்றம் பெற்ற தலைசிறந்த வரலாற்று நூல்களாகும். இவ்வாறு கல்வி வளர்ச்சியை தம்பதெனிய இராசதானியில் ஏற்படுத்த காரணமாக அமைந்த 2-ம் பராக்கிரமபாகு மன்னன் 'கலிகால சாகித்திய சர்வஞ்ஞ பண்டித' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வளர்ச்சி மட்டுமல்லாது கட்டிடக்கலை, சிற்பக்கலை என்பனவும் இக்காலத்தில் அரச ஆதரவு பெற்று வளர்ச்சியடைந் திருந்தது. சிற்பக்கலையின் வளர்ச்சியை ஹெரனை சந்திரவட்டக் கற்கள் பறைசாற்றி நிற்கின்றன.

மேலும் களுத்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரை காணப்பட்ட தென்னந்தோட்டங்களும் காட்டுப் பொருட்களும் திரவியங்களும் இவ்விராசதானியின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவின.

இவ்வாறாக 'இலங்கை என்னும் மடந்தையை என்னுடையவள் ஆக்குவேன்' எனக் கூறி ஆட்சி செய்த 2-ம் பராக்கிரமபாகு மன்னன் யாவா நாட்டுச் சந்திரபானுவின் படையெடுப்பால் தோல்வியைச் சந்தித்தமையை தொடர்ந்து தம்பதெனிய அரசு வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

'வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு
தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு'

## 4. யாப்பகுவா

இலங்கையின் புலம் பெயர் இராசதானிகளில் ஒன்றான இது உள்ளகச்சமவெளி வலயத்தில் அமைந்துள்ள ஒரு எச்சக்குன்றில் நிறுவப்பட்ட பாதுகாப்பு இராசதானியாக காணப்படுகிறது. கிகிரியாவை அடுத்து மிகச்சிறந்த பாதுகாப்பு அரண் எனப்படும் இவ்விராசதானியை 1-ம் புவனேசபாகு மன்னனே தலைநகராகத் தெரிவுசெய்தான். குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள இது கடல் மட்டத்தில் இருந்து 300 அடி உயரத்தில் காணப்படுகிறது.

1-ம் புவனேகபாகு மன்னன் தம்பதெனியாவில் அதிகரித்து வந்த வன்னித்தலைவர்களின் கலகங்களை சமாளிக்கும் முகமாகவே யாப்பகுவாவை தலைநகராக தெரிவு செய்தான். சிறந்த பாதுகாப்பு நகரமாக விளங்கிய இவ்விராசதானி கோட்டை அமைப்பிற்கும் சிறந்த இடமாக விளங்கியது. இங்கு அமைக்கப்பட்ட கோட்டை சிகிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு புகழ்பெறாவிட்டாலும் பாதுகாப்பு உணர்வினை எண்ணியே அமைக்கப்பட்டது.

மேலும் தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த இராசதானி களில் உபசம்பதா சடங்கை மேற்கொண்ட இராசதானி என்ற பெருமையையும் இது பெறுகின்றது. இதற்குப் பிற்பாடு கண்டி இராசதானி காலத்திலேயே மீளவும் இச்சடங்கு நடைபெற்றது. இவ்வாறாக உபசம்பதா விழாவை நடாத்திய வரலாற்றுப் பெருமையும் இதற்கே உரியதாகும்.

கலைவளர்ச்சி பொறுத்தும் இக்காலம் சிறப்பினைப் பெற்றுக் கொள்ளுகின்றது. யாப்பகுவாக்கோட்டை நுழைவாயிலில் காணப்படும் காவலர் உருவச்சிலைகளை இக்காலச் சிற்பக்கலை வளர்ச்சியை எடுத்துக்காட்டும் தக்க சான்றாகும். எனினும் இது பாண்டியர்களினது தொடர்பின் மூலம் ஏற்பட்ட கலைவளர்ச்சி என்றே கூறப்படுகின்றது.

மேலும் தென்மேற்கு இராசதானிக் காலத்தில் முக்கியம் பெறும் இவ்விராசதானி வெளிநாட்டு தொடர்பு, சிறந்த பாதுகாப்பு அரண் என்ற வகையிலும் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது. இக்காலத்தில் மாணிக்கக்கற்கள், யானைத்தந்தம் என்பனவும் கறுவா வியாபாரமும் இடம் பெற்றதாகக் கூறப்படுவதுடன் இதற்கு ஆதாரமாக கண்டெடுக்கப்பட்ட சீன நாணயங்களும் மட்பாண்டங்களும் உறுதி செய்கின்றன.

இவ்விராசதானி '2-ம் சிகிரியா'சுபபப்பத போன்ற பெயர்களால் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இவ்வாறாக பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய யாப்பகுவா இராசதானி புவனேகபாகு மன்னனின் ஆட்சியுடன் வீழ்ச்சியை சந்தித்துக் கொண்டது.

'விடாமுயற்சியுடன் செயற்பட்டவனுக்கு
வாழ்வில் செல்வம் பெருகும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. குருணாகல்

இலங்கையின் புலம்பெயர் இராசதானிகளில் ஒன்றாக விளங்கும் இவவரசை 2-ம் புவனேகபாகு மன்னன் தலைநகராகத் தெரிவு செய்து கொண்டான். எனினும் இவன் மகன் 4-ம் பராக்கிரமபாகு மன்னன் காலத்திலேயே பேரெழுச்சி பெற்றுக்கொண்டது. யாப்பகுவா வீழ்ச்சிக்குப் பிறகு சிறந்த குன்றுப்பகுதிகளை கொண்டு காணப்பட்டதாலேயே இது பாதுகாப்புக்கருதி தலைநகராக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் இலக்கிய வளர்ச்சி சிறப்பாக இடம் பெற்றிருந்தது. குறிப்பாக இக்காலப்பகுதியில் பாளிமொழியில் தோன்றிய இலக்கியங்கள் எல்லாம் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. 550 ஜாதக் கதைகள் மொழிபெயர்க்கப்பட்ட துடன் "சத்தகிந்துருதாகவ" சிங்கள போதி வங்ஸ்ய, அநாகத வங்ஸய ஆகிய நூல்கள் 4-ம் பராக்கிரமபாகு மன்னன் காலம் எழுதப்பட்டதால் "பண்டித பராக்கிரமபாகு" என்ற பெயரால் புகழப்படுகிறான்.

மேலும் சமய வளர்ச்சியின் பொருட்டு இங்கு ஒரு தலதா மாளிகையை நிறுவியதுடன் பூஜை வழிபாட்டு முறையை விளக்கி "தலதா சரித" என்ற நூலை எழுதுவித்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் போதி வங்சய என்ற நூல் வெள்ளரசு மரத்தின் சிறப்புப் பற்றிக் கூறுகின்றது. மேலும் தலதா மாளிகையை நிர்வகிக்க ஏராளம் கிராமங்களை கொடையாக வழங்கி கிராமதான முறையையும் இக்காலத்தில் ஏற்படுத்தினான். மேலும் இவ்ராசதானிக் காலத்திலேயே "அந்த கந்த " விகாரையும் கட்டப்பட்டது. இவ்வாறாக சமய வளர்ச்சி, சிறப்பாக நடைபெற்ற இராசதானி என்ற பெருமையையும் குருணாகல் பெற்றுக் கொள்ளுகின்றது.

பௌத்தக்கல்வி வளர்ச்சி சிறப்பாக இடம் பெற்ற இராசதானி யாகவும் குருணாகல் விளங்குகின்றது. விதாகம ஸ்ரீகனானந்த பிரிவெனா விற்கும் தெட்டகமுவ விஜயபாகு பிரிவெணாதவுக்கும் அரச அனுசரணை வழங்கப்பட்டு கல்வி வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. புகழ்பெற்ற அஸ்கிரிய பீடமும் இவ்ராசதானிக் காலத்திலேயே நிறுவப்பட்டது. இவ்வாறாக உறுதியான சமய வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, சங்கத்தை புனர் நிர்மாணித்தல் என்ற பல வகைகளிலும் இவ்ராசதானி முக்கியத்துவம் பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கோட்டை காலத்தில் பெருமளவு சிங்கள இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கான அடிப்படைகள் அனைத்தும் இவ்விராசதானிக் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. என்ற அடிப்படையிலும் சிறப்பினைப் பெற்றுக்கொள்ளுகின்றது. அத்துடன் பொருளாதார முக்கியத்துவமானது ஏனைய தென்மேற்கு இராசதானிகளை போலில்லாவிட்டாலும் சமய வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பெருமளவு பங்களிப்புச் செய்த இராசதானி இதுவேயாகும்.

24 ஆண்டுகள் சிறப்பாக ஆண்ட இவனுடைய காலத்தில் போதிமாபா என்பவனின் கிளர்ச்சி இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதனால் ஆட்சியை இழந்த பிற்பாடு 5-ம் விஜயபாகுவின் மகன் 4-ம் புவனேகபாகு 1341இல் கிளர்ச்சியை அடக்கி ஆட்சியை கைப்பற்றிக் கொண்டான். இதன் பிற்பாடு இவ்விராசதானி கைவிடப்பட்டு கம்பளை தலைநகராக்கப்பட்டது.

"தொடரும் செயலை பயன்
காணும் வரைக்கும் விடவே கூடாது"

# 6. கம்பளை

இடம் பெயர் இராசதானிகளில் ஒன்றாக விளங்கும் இக் கம்பளை இராசதானி 4-ம் புவனேகபாகு மன்னால் தலைநகராகத் தெரிவு செய்யப்பட்டது. கங்கசிறிபுர, கங்காசிறிபுர என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் இவ்விராசதானி கம்பளைக் குன்றை அண்டி உருவாக்கப்பட்டது. இது இராசதானி ஆவதற்கு முன்பு ஓர் உபநகரமாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் புத்தசாசனமானது மறுசீரமைப்புச் செய்யப் பட்டது. கம்பளைக்கு அண்மையிலுள்ள சித்துகுவளை என்ற இடத்தில் லங்காதிலக விகாரையும் கடலாதெனியவில் சத்தா்ம திலக விகாரையும் 5-ம் புவனேகபாகு மன்னனால் நிறுவப்பட்டது. கடலாதெனிய விகாரையானது செங்கல்லால் அமைக்கப்பட்டது. இதன் அடிப்பாகமும் கதவு நிலைகளும் கல்லால் ஆனது. 96' நீளம் 78' அகலமும் 80' உயரமும் கொண்டது. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டதாக விகாரைகள் அமைக்கப்பட்டமை இவ்ராசதானியை பெருமை கொள்ளச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கம்பளைக் காலத்தில் கட்டியெழுப்பப்பட்டதாக கூறப்படும் நாத தேவாலயம், ஆலாஷன மழுவிலுள்ள கெடிகே என்பன சிறப்பிற்குரியவை ஆகும். அத்துடன் மரச்செதுக்கல் கலைக்கு பிரசித்தி பெற்ற அம்பக்கே தேவாலயம் என்பன இக்காலத்திலேயே கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக பிற்கால சந்ததி யினருக்காக பல சமயக் கட்டிடங்களை நிறுவி புத்த சமய வளர்ச்சியை ஏற்படுத்திய சிறப்பினையும் இவ்வரசு பெறுகின்றது.

கம்பளை காலத்தில் இபன்பதூதா என்ற தேசசஞ்சாரி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவரது கருத்துப்படி கம்பளை காலத்தில் அரசர்கள் பலவீனமானவர்களாக இருந்ததுடன் "அழகக்கோனர்" எனப்படும் சேனாதிபதிகளின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டதாகவும் கூறியுள்ளார்கள். மேலும் வடபகுதி ஆரியச்சக்கர வர்த்தி சிலாபம் வரை காணப்பட்ட முத்துத் தளங்களை பலவந்தமாக மடித்து முத்துக் குளிப்பை மேற்கொண்டிருந்தான் எனவும் கூறியுள்ளார்.

மேலும் இலக்கிய வளர்ச்சியிலும் இவ்விருராசதானி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதாவது தூது விடு இலக்கியங்கள் முதலில் இங்கேயே தோற்றம் பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது. மயூரசந்தேசய என்பது மிகப்பழைய நாலடிச்சந்த காவியம் ஆகும். இதைவிட திசர சந்தேசய, விமுக்கி சங்கிரய, எலு அர்த்தன கலு வங்ஸ என்பனவும் இக்காலத்தில் தோற்றம் பெற்ற நூல்கள் ஆகும். மேலும் புத்த பீடமும் எழுச்சி பெற்றுக்காணப்பட்டது. வில்கம்முலதேரர், வனரத்தின தேரர், சீலவங்ஸதேரர், ஜயபாகுரக்கிரதேரர் ஆகிய 4 சங்கராசாக் களும் இக்காலத்தில் வாழ்ந்ததாக கூறப்படுகிறது.

இவ்வாறாக சமயக் கட்டட வளர்ச்சி நூல்கள் பல எழுதப்பட்டமை, இலக்கியங்கள் பல படைத்த புலவர்கள் வாழ்ந்தமை, கலை வளர்ச்சி ஏற்பட்டமை எனப் பலவகைகளிலும் சிறப்பினைப் பெற்ற காலமாக இக் கம்பளைக் காலம் விளங்குகின்றமை சிறப்பிற்கு உரியதாகும்.

'குறிக்கோள் இல்லாத வாழ்க்கை
துடுப்பில்லாத படகை போன்றது'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கோட்டை

இலங்கை வரலாற்றில் தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த இராசதானிகளில் முக்கிய இடம் பெறும் இராசதானி கோட்டை ஆகும். இது இராசதானி ஆவதற்கு முன்னர் நிஸ்ஸங்க அழகக்கோணர் என்ற தளபதியால் பாதுகாப்பு பிரதேசமாக நிர்மாணிக்கப்பட்டது. இது தியவன்ன ஓயா, சதுப்பு நிலம் என்பவற்றால் சூழப்பட்ட பிரதேசமாகும்.

கோட்டையானது அழகக்கோணர் குடும்பத்தைச் சேர்ந்த பிரபு நிஸ்ஸங்க அழகக்கோணர் என்பவரால் தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவும் கரையோரக் கறுவாக்காடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும் உருவாக்கப்பட்டாலும் 'ஜெயவர்த்தனபுரம்' என்ற பெயருடன் முதன் முதலில் தலைநகராக்கிய பெருமை 6-ம் பராக்கிரமபாகுவையே சாரும்.

கம்பளை இராசதானிக்காலம் முதல் செல்வாக்குப் பெற்றிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் அடிக்கடி மேற்கொண்ட ஆக்கிரமிப்பும் மலையகம் அந்நிய ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியமை என்பனவும் கறுவாத்தளங்கள், முத்துத் தளங்கள் என்பவற்றை பாதுகாக்கும் வசதி காணப்பட்டமையே 6-ம் பராக்கிரமபாகு கோட்டையை தலைநகராகத் தெரிவுசெய்யக் காரணம் ஆகும்.

ஏறத்தாள 50 ஆண்டுகள் சிறப்பான ஆட்சியை மேற்கொண்ட இவன் இந்நகரை மையமாகக் கொண்டே இலங்கை முழுவதையும் ஒருகுடையின் கீழ் கொண்டு வந்தான். இவன் தன் வளர்ப்பு மகனான சப்புமல் குமாரன் தலைமையில் யாழ்ப்பாணத்தை வென்றதுடன் தென்னிந்திய துறைமுகம் ஒன்றின் மீது படையெடுத்து இருந்தான் என்றும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

கோட்டை இராசதானிக் காலமானது சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் எனக்கூறுப்படுகிறது. இக்காலத்தில் சந்தேசய எனப்படும் தூதுவிடு இலக்கியங்கள் பல தோற்றம் பெற்றமையும் பல அறிஞர்கள் ஆதரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறிப்பாக சலஹினி சந்தேசய, காவ்ய சேகரய, பரவி சந்தேசய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகில சந்தேசய போன்ற இலக்கியங்கள் இக்காலத்தில் தோற்றம் பெற்றுக் கொண்டன. வைத்தியத் துறையின் பொருட்டு வைத்திய சிந்தாமணி, யோக ரத்தினாகரய போன்ற இலக்கியங்களும் எழுச்சி பெற்றகாலமாக இக்காலம் விளங்குகின்றது.

போர்த்துக்கேயர் 1505-ம் ஆண்டு இலங்கைக்கு வந்தபொழுது முக்கியத்துவம் பெற்றிருந்த இராசதானிகளில் இதுவும் ஒன்றாகும். அப்பொழுது 8-ம் வீரபராக்கிரமபாகு கோட்டையின் மன்னனாக இருந்தான். பின்னர் 6-ம் விஜயபாகுவின் காலத்தில் கோட்டை இராச்சியம் கோட்டை, சீதாவாக்கை, இறய்கம எனப்பிரிந்து பலமிழந்தது. 1597-ம் ஆண்டு போர்த்துக்கேயரின் நேரடி ஆதிக்கத்திற்கு உட்பட்டு வீழ்ச்சியைப் சந்தித்துக் கொண்டது.

> 'இடையூறுகளை கண்டு கலங்காதே
> இடையூறுகளில் தான்
> உனது வீரமும், தியாகமும், மனப்பக்குவமும்
> உயர்ந்த நோக்கங்களும் வளர்கின்றது.'

## 8 கோகர்ண

இலங்கையில் காணப்படும் துறைமுகங்களில் மிகச்சிறப்பு வாய்ந்ததும் உலக நாடுகள் பலவற்றினதும் பார்வையை தன் பக்கம் ஈர்த்த துறைமுகமாக கோகர்ண விளங்குகின்றது. இது கோகண்ண, கோணகாம, கோணநாமக்க, திருகோணமலை, கோணதிட்டு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் பல நூற்றுக் கணக்கான கப்பல்களை நிறுத்தி வைக்க முடிதல், பல துறைகள் இயற்கையாகவே கொண்டமைந்த துறைநகராக காணப்படுதல், யார் கண்ணிற்கும் புலப்படாத இயற்கை அமைப்பு என்பன காரணமாக இத்துறைமுகம் புகழினையும் வர்த்தக பொருளாதார முக்கியத்துவத் தினையும் பெற்றிருந்தது.

ஆரம்பகால குடிப்பெயர்விற்கு பயன்பட்ட துறைமுகம் என்ற வரலாற்றுப் பெருமையையும் இது பெறுகின்றது. குறிப்பாக பண்டுவாசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவன், பத்தகச்சானாவின் குழுக்கள் இத் துறைமுகத்தினூடாகவே இலங்கையை வந்தடைந்தனர். மேலும் இத்துறைமுகத்தினூடாக தபசு, பல்லுக என்ற இரு வர்த்தகர்கள் வந்து சென்றதாக வரலாற்று ஏடுகள் கூறுகின்றன.

இந்து சமுத்திரத்தின் வர்த்தக உரிமையை தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஆவல் கொண்ட சோழர் அதனைக் கட்டுப்படுத்த ஏற்ற இடமாக இலங்கையின் கோரண துறைமுகம் விளங்கியமை யாலேயே இலங்கைமீது படை எடுத்தனர். மேலும் நீலகண்ட சாஸ்திரியின் கூற்றுப்படி கடாரம் நோக்கி புறப்பட்டு சென்ற இராசேந்திர சோழனின் படைகள் கோகர்ண துறைமுகத்திலிருந்தே புறப்பட்டுச் சென்றது என கூறியுள்ளார்.

சோழர்களின் நிர்வாகத் தலைநகரான பொலநறுவைக்கும் கோகர்ணத்திற்கும் இடையில் ஒரு பெருந்தெருவை நிர்மாணித்து அதற்கு இராசராசப் பெருந்தெரு என்று பெயரிட்டதுடன் திருகோணமலையில் உள்ள வெல்கம் விகாரையை வில்கம விகாரை எனும் பெயரால் சோழர் திருத்தியமைத்தனர். இதன் மூலம் சோழர் இந்நகரை தம் வர்த்தக மையமாக விருத்தி செய்து வைத்திருந்தனர் என்பது புலனாகி நிற்கின்றது.

மேலும் இலங்கையை கைப்பற்றி ஆண்ட ஐரோப்பியர் கூட இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்திருந்தனர். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இங்கு ஒரு கோட்டையை நிறுவி இத்துறைமுக முக்கியத்துவத்தை நன்கு பயன்படுத்தி இருந்தனர். மேலும் பிரித்தானிய பிரதமர் பிற் என்பவர் பிரித்தானிய பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இந்துசமுத்திர கடலாதிக் கத்தை வலுப்படுத்த பிரித்தானியருக்கு 'திருமலை' துறைமுகம் மிக அவசியம் எனக் கூறினார். இதன் மூலம் இத் துறைமுகத்தின் முக்கியத்துவம் புலனாகின்றது. மேலும் 2-ம் உலகமகாயுத்த காலத்தில் பிரித்தானியர் இதனையே தமது இந்து சமுத்திர விநியோக நிலையமாக கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மகாவலிகங்கை இத்துறைமுகத்தை அண்டியே கலப்பதும் இத்துறைமுகத்தை சிறப்படையச் செய்கின்றது. இவ்வாறாக பல வரலாற்றுப் பாரம்பரியங்களை கொண்ட துறைமுகமாக கோகர்ண விளங்குகின்றமை சிறப்பிற்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 மாந்தை

இலங்கையின் மிகப்பழமை வாய்ந்த துறைமுகநகரங்களில் ஒன்றாக மாந்தை விளங்குகின்றது. இது இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்து காணப்படுகின்றது. மகாதீர்த்தம், மாபடு, மகாவொடி, மாதோட்டம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்திய நிலத்திணிவிற்கு அண்மையில் அமைந்திருப்பதனால் இந்தியாவில் இருந்து பல ஆரியக் குடியிருப்பாளர்கள் இதனூடாக வருகை தந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அருவி ஆறு என அழைக்கப்படும். மல்வத்து ஓயா இத்துறை முகத்தினை அண்டியே கடலுடன் கலக்கின்றது. இலங்கையின் ஆரியக் குடியினரான விஜயனும் 700 தோழர்களும் இத்துறைமுகத்தினூடாகவே வருகை தந்தனர் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. 'தம்பன்னாவ' குடியிருப்பும் இத் துறைமுகத்தை அண்டியே ஏற்படுத்தப்பட்டமையும் இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றன.

உரோம நாட்டைச் சேர்ந்த 'கொஸ்மஸ் இண்டிக்கொப்பிளியூட்' என்பவனின் கூற்றுப்படி பல்வேறு நாட்டைச் சேர்ந்த வர்த்தகக் கப்பல்களால் இலங்கையின் மாந்தைத் துறைமுகம் நிரம்பி இருந்தது என்பதனூடாக இதன் முக்கியத்துவம் வெளிப்பட்டு நிற்கிறது. அதாவது இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல் உரோம், சீனா, பர்மியா, காம்போடியா நாட்டுக் கப்பல்களும் இங்கு வருகை தந்தமை புலனாகிநிற்கின்றது. இத்துறைமுகத்தில் மேற்கொண்ட அகழ்வராச்சி களின்போது கண்டெடுக்கப்பட்ட கிரேக்க, உரோம, சீன, அரேபிய, இந்திய நாட்டுநாணயங்கள் இந்த வர்த்தக முக்கியத்துவத்தை மேலும் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

மேலும் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் பல இத்துறைமுகத்தினூடாக நடைபெற்றன. குறிப்பாக வட்டகாமினி காலத்தில் புலகத்த குழுவினரும் தாதுசேனன் காலத்தில் பாண்டு குழுவினரும் இத் துறைமுகமூடாகவே படையெடுத்தமை சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் சோழர், ஸ்ரீமாற ஸ்ரீபல்லவன் முதலிய பாண்டிய அரசர்கள் மாகன் ஆகியோரது படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுப்புக்கள் இத்துறைமுகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டமை இத்துறை முகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டி நிற்கிறது.

மேலும் விஜயபாகு மன்னன் சோழருக்கு எதிராக மேற்கொண்ட மூன்றாவது படைஎடுப்பின்போது தன்னுடைய திட்டத்தில் மாந்தை ஊடாக வரும் உதவிப்படையை தடுப்பதும் ஒன்றாகக் காணப்பட்டமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. இதே சமயம் பராக்கிரம பாண்டிய மன்னனுக்கு உதவும் முகமாக பராக்கிரமபாகு இத்துறைமுகத்தினூடாகவே உதவிப்படையை அனுப்பி வைத்தான் என்பதும் இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

ஐரோப்பியரும் இந்ததுறைமுகத்தின் வரலாற்று முக்கியத்துவம், புவியியல் அமைவிடம் என்பவற்றை கருத்திற்கொண்டு மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கினர். மேலும் சோழர் இதனை 'இராசராசபுரம்' என்று அழைத்தனர். இவ்வாறாக பல வரலாற்றுச் சிறப்பினையும் புகழினையும் தன்னகத்தே கொண்டதாக மாந்தை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 10 ஜம்புகோளப்பட்டினம்

இலங்கையில் காணப்படும் புராதன துறைமுகங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாக ஜம்புகோளப்பட்டினம் விளங்குகின்றது. ஜம்புகோளப்பட்டினம் என்பது யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்பட்ட பெயராகும். இப்பிரதேசத்தின் தொன்மைபற்றி நோக்கும் போது இலங்கைப் பிக்குணிகளுக்கு தர்ம உபதேசம் செய்ய வந்த சங்கமித்தா பிக்குணி மகாபோதி விருட்சத்தின் வலது பக்க கிளையுடன் இந்த இடத்திலேயே வந்து இறங்கினார் என்பதனூடாக இத்துறைமுகத்தின் முக்கியத்துவம் வெளிப்பட்டு நிற்கிறது.

தேவநம்பியதீஸன் காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான சகல தொடர்புகளும் ஜம்புகோளம் ஊடாகவே நடைபெற்றது. மேலும் அரிட்டன் குழுவினர் திஸ்ஸன் முடிசூடிய செய்தியை அசோகனுக்கு அறிவிப்பதற்காக இத்துறைமுகம் ஊடாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனர். மேலும் சங்கமித்தா பிக்குணியை இத்துறைமுகமூடாக நாட்டுக்குள் வருவிக்க இருந்த தீசன் அதனை சிறப்பிக்க 'ஸமுத்த-பண்ண-ஸாலா என்ற மண்டபத்தினையும் ஜம்புகோள விகாரையையும் கட்டுவித்தான் என்பதனூடாக இத்துறைமுகத்தின் சிறப்பு வெளிப்படுத்தப்படுகிறது.

இங்கு ஆரம்ப காலத்தில் 'நாகர்' என்ற இனத்தவர்கள் அண்டி வாழ்ந்தாக கூறப்படுவதுடன் அதற்கான வரலாற்று மூலாதாரங்களும் அகப்பட்டுள்ளன. வடபகுதியில் விரிவான தொல்லியல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கந்தரோடைப் பிரதேசம் இதற்கு அண்மையில் அமைந்திருப்பதும் இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தொன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு ஜம்புகோளம் தவிர்ந்த சிங்கை நகர் என்ற இன்னொரு பெயரும் உண்டு. யாழ்ப்பாண அரசன் 'பொங்கொல நீரச் சிங்கை நகர் ஆரியன்' என்று கம்பளைக் கல்வெட்டில் சிறப்பித்துக் கூறப்படுகிறான். மேலும் கோட்டை இராசதானி காலத்தில் இது 'யாபபட்டுண' என்று அழைக்கப்பட்டது. சப்புமல் குமாரையா யாழ்ப்பாணம் மீது படை எடுத்து வெற்றி கொண்டமைபற்றி கோகில சந்தேசய நூல் குறிப்பிடும்பொழுது 'யாப்பபட்டுண' என்றே குறிப்பிடப் பட்டிருந்தது.

மேலும் கச்சாய், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை உட்பட பல இயற்கைத்துறைமுகங்களை கொண்டிருந்ததன் காரணமாக ஆரம்பகாலம் முதலே இப்பிரதேசம் தீவின் ஏனைய பகுதிகளுடனும் ஏனைய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்பைக் கொண்டிருந்தது. மேலும் பராக்கிரமபாகு, சோழஅரசர்கள் போன்றோர் இராணுவகேந்திர முக்கியத் துவம் கருதி இங்கு கடற்தளங்களை அமைத்து வைத்திருந்தமையும் இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

இங்கு சீமெந்துத்தொழிற்சாலையும் மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவிலும் அமைந்து காணப்படுதல் சிறப்பிற்குரிய அம்சமாகும். இவ்வாறாக பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட துறைமுகமாக ஜம்புகோளப்பட்டினம் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 சிகிரியா

இலங்கையில் வரலாற்றில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் நகரங்களில் சிகிரியாவும் ஒன்றாகும். இது அநுராதபுரத்திலிருந்து ஏறக்குறைய 30km தென்கிழக்குத் திசையிலும் 15km வடகிழக்கு திசையிலும் அமைந்துள்ளது. 1 $^1/_2$ கெக்டெயர் பரப்பளவைக் கொண்டது. இது 180m உயரத்தில் அமைந்துள்ள ஒரு எச்சக்குன்றாகும். இது சிங்ககிரி, சீகிரி, ஆலமந்தாவ, அழகாபுரி, காசியப்பநகர, ஆலமந்தாவபுர என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது

வரலாற்று ரீதியாக இது மிகுந்த முக்கியத்துவத்தை பெறும் நகரமாகும். தன்னுடைய தந்தையைக் கொன்று சகோதரனை விரட்டி விட்டு ஆட்சியை கைப்பற்றிக் கொண்ட காசியப்ப மன்னனால் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் தன் சகோதரன் முகலனுக்கு பயந்து மலை உச்சியில் அரணை அமைத்துக் கொண்டான் என்று சிலர் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாற்றில் சிகிரியாவானது பல வகைகளிலும் முக்கியத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளுகின்றது. பாதுகாப்பு நகரமாக மட்டுமன்றி சிறந்த ஓவியக்கலை நுட்பங்களை வெளிப்படுத்திக் காட்டும் நகரமாகவும் விளங்குகின்றது. அதாவது சிகிரியா பாறைச்சுவர்களில் 81-ற்கும் மேற்பட்ட அப்பரசுகளின் வர்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இது காசியப்பனால் பிற்கால உலகிற்கு வழங்கப்பட்ட நன்கொடையாகக் கருதப்படுகிறது.

மேலும் இவ் ஓவியங்களில் 22 ஓவியங்கள் எஞ்சியுள்ளன. இந்தியா அஜந்தாக்குகை ஓவியங்களை ஒத்ததாகக் காணப்படும் இவ் ஓவியங்கள் ஈரச்சுதை, வர்ணப்பாவனை காரணமாக இன்னும் பளபளப்பை இழக்கவில்லை என்பது இதன் சிறப்பை எடுத்துக்காட்டி நிற்கின்றது. பிற்காலத்தில் இங்கு வாழ்ந்த துறவிகள் இங்கு சமைத்து உண்டதன் காரணமாக இவ் ஓவியங்களின் பிரகாசத்தன்மை சற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்துள்ளது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகள், தொழில்நுட்ப பிரயோகங்கள், அழகியல் அம்சங்களை உள்ளடக்கி கட்டப்பட்ட இம்மையம் அக்காலத்தின் பல்துறைசார் வளர்ச்சிப் போக்கினை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

பாதுகாப்பான நகரம் என்ற அடிப்படையில் இது மிகுந்த முக்கியத்துவத்தினை அடைகிறது. 1500 அடி உயரமான குன்றின் உச்சிக்கு கட்டடப் பொருட்களைக் கொண்டு சென்று கோட்டை அமைத்தமையும் படிக்கட்டுக்களை ஒற்றை வரிசையாக அமைத்தமை யும் குன்றின் அடியில் நீர் அகழி அமைத்தமையும் இந்நகரம் பாதுகாப்பு உணர்வுடனே அமைக்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்து கின்றன.

தொழில்நுட்பவியலாளர்களின் திறமையை வெளிப்படுத்தும் நகராகவும் சிகிரியா விளங்குகின்றது. அதாவது 1500 ஆண்டுகள் கடந்தும் கண்ணாடிச்சுவர் இன்று வரை சிறப்பாக காணப்படுவதும் சிகிரியாவைச் சுற்றி ஓடும் சிற்றாறு நீரகழியுடன் தொடர்புபட்டிருப்பதும் தொழில்நுட்பவியலாளர்களின் திறன்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் அழகியல் உணர்வு குறித்தும் இந்நகரம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது மாடிப்பூங்கா, கற்பூங்கா, நீர்ப்பூங்கா என்பன அழகியல் உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. மேலும் ஓவியங்களை பார்வையிட வந்த சுற்றுலாப்பயணிகள் இதன் அழகைப் புகழ்ந்து எழுதிய கிறுக்கல் கவிதைகள் இங்கு காணப்படு வதும் முக்கிய விடயம் ஆகும்.

இவ்வாறாக ஆசியாவின் சிறந்தகலாசார மையமாகக் காணப்படும் சிகிரியாவானது பாதுகாப்பு உணர்வு, அழகியல் உணர்வு, சிறந்த தொழில்நுட்ப பிரயோகங்களை உள்ளடக்கிய சுற்றுலாப் பயணி களை கவரும் இடமாக விளங்குகின்றமை சிறப்பிற்குரிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மிகிந்தலை

இலங்கையில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமயநகரங்களில் மிகிந்தலையும் ஒன்றாகும். உள்ளகச் சமவெளியில் அமைந்து காணப்படும் எச்சக்குன்றான இது சேத்தியகிரி, மிசாகபர்வத போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

பல வரலாற்றுச் சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட குன்றாக இது விளங்குகின்றது. பௌத்தமதத்துடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் பல இவ்விடத்தில் நடை பெற்றமையே இக் குன்று முதன்மை பெறக் காரணம் ஆகும். அதாவது மகாவம்ச நூலின் கருத்துப்படி மகிந்த தேரரும், தேவநம்பியதீஸ மன்னனும் இவ்விடத்திலேயே சந்தித்துக் கொண்டதாகவும் இவ்விடத்திலேயே மன்னன் மதம்மாறியதாகவும் குறிப்பிடுவதோடு முதலாவது பௌத்தனை இலங்கைக்கு வழங்கிய பெருமையை இவ்விடம் பெறுகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

மேலும் தீஸனுடன் அரண்மனைக்கு விஜயம் சென்ற மகிந்ததேரர் குழுவினர் அங்கு சமயப் போதனைகளை நிகழ்த்த முடித்ததன் பிற்பாடு மழைக்காலத்தை கழிக்க மிகிந்தலைக்கே சென்றனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் வழிபாட்டு நிலையங்கள் இல்லாத குறையை நீக்கும் பொருட்டு இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட புனிதப்பொருட்கள் இவ்விடத்தில் வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டமையினால் 'சேத்தியகிரி' என்ற பெயரை இவ்விடம் பெறுகின்றமை சிறப்பிற்குரியது ஆகும்.

பல்வேறுபட்ட அரசர்களும் பலவிகாரைகளையும் சமயக்கட்டிடங் களையும் நிறுவியமையாலும் இவ்விடம் புகழ் பெறுகிறது. தீஸன் தானும் மகிந்தரும் சந்தித்த இடத்தில் பல தாதுகோபுரங்களையும் விகாரைகளையும் கட்டுவித்தான். பிக்குகளுக்கென அமைக்கப்பட்ட ஆச்சிரமங்கள், நீர்தடாகங்கள், வைத்தியசாலைகள் என்பன இங்கு அமைக்கப்பட்டதுடன் ஆந்திரக் கலையின் செல்வாக்கை எடுத்துக் காட்டும் 'கந்தகசேத்திய' என்ற ஆலயம் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக் கலைமரபுகளை உள்வாங்கி கலைமரபுகளை வளர்த்தெடுத்த இடமாக இது காணப்படுகிறது. அதாவது 'கந்தக சைத்திய' வாயில் மண்டபத்தில் காணப்படும் செதுக்கல்கள் அநுராதபுர ஆரம்ப கால செதுக்கல்களுக்கு எடுத்துக்காட்டாக அமைவதுடன் அமராவதிய செதுக்கல் மரபை பின்பற்றி செதுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்க விடயமாகும்.

அக்கால தொழில்நுட்ப உயர்வினையும் புத்த துறவிகளுக்கு அரசர்களால் வழங்கப்பட்ட வைத்திய சேவையினையும் சித்திரப்பதாக மிகிந்தலை அடிவாரத்தில் காணப்படும் வைத்தியசாலை விளங்கு கின்றது. இது சேன மன்னனினால் சூழல் முகாமைத்துவத்தினை கருத்திற்கொண்டு நிறுவப்பட்டதாகும்.

இவ்வாறாக பல சமய வரலாற்றுப் பாரம்பரியங்களை கொண்டதாக விளங்கும் இவ்விடமானது இன்றும் பௌத்தமக்களின் புனித நகரமாக போற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தங்க மொழிகள்

- *தன்னம்பிக்கை கொண்டவருக்கு உலகத்தின் எல்லாச் செல்வங்களும் கைக்கெட்டிய தூரத்தில் உண்டு.*
- *நாம் புறக்கணிக்கும் ஒவ்வொரு கடமையும் நாம் தெரிந்து கொள்ளத் தவறிய ஓர் உண்மையை புலப்படுத்தக்கூடியது.*
- *பூட்டுக்கள் தயாரிக்கும்போதே சாவிகளும் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரச்சனை உருவாகும் போதே தீர்வும் உருவாகி விடுகிறது.*
- *உங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பிலும் இடைஞ்சலைக் கண்டால் உடனே ஒதுங்கிவிடாதீர்கள். ஒவ்வொரு தடையும் வெற்றிக்குப் படிக்கற்கள்.*
- *இறைவன் ஒருவனே முடிவுகளைத் தருபவர். அதை அவரிடம் விட்டுவிட்டு எல்லா வேலைகளையும் செய். எப்போதும் வேலை செய்து கொண்டேயிரு.*
- *உளிபடாத கல் சிலையாவதில்லை. உழைப்பில்லாமல் கனவு நனவாவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 கலா ஓயா

இலங்கைக்கு வளத்தையும் செழிப்பையும் அளிக்கும் மிக முக்கிய இடத்தைப் பெறுவது கலாஓயா ஆகும். இது கோணநதி, கொனாநதி, பொன்பரப்பி ஆறு எனப் பலபெயர்களால் சிறப்பித்து அழைக்கப்படுகின்றது. மாத்தளைக்குன்றுகளில் உற்பத்தியாகி தென்மேற்கு, வடகிழக்கு பருவக்காற்றுக்கள் மூலம் நீரைப் பெறும் இவ் ஆறானது 148km தூரம் சென்று வடமேற்கு கடலில் அதாவது தற்போதைய புத்தளம் மாவட்டத்தில் கடலுடன் கலக்கிறது

கலாஓயாப் பள்ளத்தாக்கையும் மல்வத்து ஓயாப் பள்ளத் தாக்கையும் அடுத்துள்ள பிரதேசங்களில் நீர்ப்பாசனத்திற்கு பயன்படும் இந்நதியானது ஆரம்ப காலம் முதல் உலர்வலய நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு மிகவும் பயன்படுகிறது. இந்நதியை மையமாகக் கொண்டே தாதுசேன மன்னன் கலாவாவி என்னும் பெருங்குளத்தை நிர்மாணித்தான். தாதுசேனனுக்கு பிற்பட்ட காலம் பெருமளவு நீரை அநுராதபுரநகருக்கு வழங்கிய பெருமை இந்நதியையே சாரும்.

மேலும் கலாபளளுவாவி, சோலைவாவி, கந்தலபவாவி, போன்ற பெருங்குளங்களும் ஏராளமான சிறிய குளங்களும் இந்நதியை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் குடியேற்றங்கள் நிறுவ துணைபுரிந்த ஆறுகளில் ஒன்றாக கலாஓயா விளங்குகின்றது. குறிப்பாக 'உருவெல கம' குடியிருப்பு இந்நதியை ஆதாரமாகக் கொண்டே நிறுவப்பட்டது.

மேலும் தென்னிந்தியா ஆதிச்ச நல்லூர் நாகரீக வரலாற்றை ஒத்ததாக இலங்கையில் விளங்கும் பொன்பரிப்பு ஆய்வு மையம் கலாஓயாவை அண்டிக் காணப்படுவது இந்நதியினை புகழுடையச் செய்கின்றது. அத்துடன் அவுக்கண புத்தர்சிலையும், காஸ்கருவ புத்தர் சிலையும் இந்நதியை அண்டியே நிறுவப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

மகாவம்ச நூலின் கூற்றுப்படி தாதுசேன மன்னனின் காலத்திற்கு பிறகே இந்நதி புகழ்ச்சி அடைந்ததாக கொள்ளப்படுகிறது. அதாவது தாதுசேனன் புத்ததுறவியுடன் பாதுகாப்புத்தேடி கலாஓயாவின் தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிக்கு செல்ல முற்பட்டபோது கலாஓயா கரைபுரண்டு ஓடியதாகவும் இதனைப் பார்த்த துறவி நீர் இதனைத் தடுத்து ஒரு குளம் கட்ட வேண்டும் எனக் கூறியதற்கு அமைவாகவே பின்னாளில் தாதுசேனன் மன்னனாக வந்ததும் அதனைக் தடுத்து கலாவாவியை நிர்மாணித்தான் என கூறப்படுகிறது.

இவ்வாறாக தன் மகன் காசியப்ப மன்னனால் சிறைப்பிடிக்கப் பட்ட தாதுசேனமன்னன் தன் செல்வம் கலாவாவி நீரே எனக் கூறியமையும் இந்நதியினை புகழுடையச் செய்கின்றது.

அநுராதபுரத்தின் விவசாய நடவடிக்கைகளுக்கும் குடிநீர்த் தேவைகளுக்கும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் பெரும் பங்கை இன்றும் வழங்கும் நதியாக கலாஓயா விளங்குகின்றது. மேலும் இந்நதியின் முக்கியத்துவம் கருதி தொடர்ந்தும் சிறப்பாக பராமரிக்கப்படுதல் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 14 மகாவலி கங்கை

இலங்கையில் காணப்படும் நதிகளில் மிக நீளமான நதியாக காணப்படுவது மகாவலிகங்கை ஆகும். கோட்டன் சமவெளியில் உற்பத்தியாகி தும்பறைப் பள்ளத்தாக்கின் ஊடாக இருபருவக்காற்றி னையும் பெற்று பாய்ந்து செல்லும் இந்நதியானது கிழக்குக் கடலில் சங்கமமாகின்றது. ஆரம்ப காலத்தில் மகாவாலுகா நதி என அழைக்கப்பட்ட இது சிங்கள மக்களால் ஜீவன கங்கை என அழைக்கப் படுகிறது.

இந்நதியானது பல வரலாற்று முக்கியத்துவத்தினை கொண்டு விளங்குகின்றது. இலங்கையில் ஏற்பட்ட ஆரியக் குடியிருப்பு, நாகரீகவளர்ச்சி என்பன குறித்து மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றது. கோகர்ணதுறைமுகத்திற்கு அருகில் இந்நதி கடலை அடைவதன் காரணமாக கோகர்ணத்தில் வந்திறங்கிய ஆரியக் குழுக்கள் இந்நதி யூடாகவே நாட்டிற்குள் பிரவேசித்தனர். பத்தகச்சானா, பண்டுவாசு தேவன் குழுவினர் இந்நதியினூடாகவே வந்ததாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அவர்கள் ரோகண மகியங்கனை, கோகர்ண ஆகிய இடங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர் என்று வரலாற்று ஏடுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மிகப்பெரியதும் நீளமானதுமாக விளங்கும் இந்நதி பல கிளைநதிகளைக் கொண்டு விளங்குகின்றது. இந்நதியின் 3 முக்கிய கிளை நதிகளில் ஒன்றாகிய அம்பன் கங்கைக்கு குறுக்கே அமைக்கப்பட்ட அணையின் மூலம் திசைதிருப்பப்பட்ட நீரை எலகரக் கால்வாய் வழியாக 48km தூரம் எடுத்து வந்து வசப மன்னன் அநுராதபுரத்திற்கு நீர்பாய்ச்சி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக கொண்டு வரப்பட்ட நீரை மகாசேன மன்னன் 25 $^1/_2$ மைல் நீளம் நீடித்து நிறுவிய கவுடுலு வாவிக்கு வழங்கினான். மேலும் இந் நீரை 2-ம் அக்கபோதி மன்னன் 50 மைல் தூரம் கொண்டு சென்று நீரை வழங்கியிருந்தான். இவ்வாறு மிக நீண்ட தூரத்திற்கு நீர் வழங்கிய பெருமை மகாவலிகங்கைக்கே உரியதாகும்.

மேலும் இந்நதியானது பல இடங்களுக்கு நீரை வழங்கப்பயன் பட்டது. அங்கமெடில்ல அணைமூலம் இந்த நதியில் இருந்து திசைதிருப்பப்பட்ட நீர் தோப்பாவாவிக்கு வழங்கப்பட்டது. இத் திட்டத்தை மகாபராக்கிரமபாகு மன்னன் விஸ்தரித்து அங்கமடில்ல திட்டம் எனப் பெயர் மாற்றினான். மகாவலி நதி திருப்பத்திற்கு உட்படும் மகியங்கணைப்பகுதியில் 1-ம் அக்கபோதி மன்னன் மினிப்பே திட்டத்தை நிறுவியிருந்தான். இவ்வாறாக இந்நதி நீர்ப்பாசன வரலாற்றை கொண்டு விளங்குகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

மேலும் இராசரட்டையில் இருந்து துட்டகாமினி போன்ற தமிழ் மன்னர்கள் எல்லாளன் போன்றோரை தோற்கடிக்க இந்நதியினுடாகவே படையெடுத்துச் சென்றனர். விஜயபாகுமன்னன் சோழருக்கு எதிராக படையெடுப்பின் போது இந் நதியினை பயன்படுத்தியுள்ளான். இராசரட்டை உருகுணைரட்டை இடையே பிரதான நிர்வாக எல்லையாகவும் இந்நதி விளங்குகின்றமை இதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையின் அபிவிருத்தி நோக்கில் கொத்மலை, ரந்தனிகலை, ரன்தம்பே முதலான நீர்த்திட்டங்கள் இந்நதியை மையமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. நாட்டின் மின் உற்பத்தியில் 40% இத்திட்டம் மூலம் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 மல்வத்து ஓயா

இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் நதிகளில் மல்வத்து ஓயாவும் ஒன்றாகும். மகாவலி கங்கைக்கு அடுத்து நீண்ட நதியாக விளங்கும் இவ் ஆறு ரிதிகலந்த குன்றுகளுக்கு அண்மையில் ஊற்றெடுத்து 164km தூரம் மன்னாருக்கு அண்மையில் கடலுடன் கலக்கிறது. அருவியாறு, கதம்பநதி போன்ற பல பெயர்களால் இந்நதியானது அழைக்கப்படுகிறது.

இலங்கையின் நாகரீக வளர்ச்சியில் இந்நதி மிகுந்த முக்கியத் துவத்தினைப் பெறுகின்றது. விஜயனும் அவனுடைய 700 தோழர்களும் இந்நதிக்கரையிலே முதன் முதலில் வந்து இறங்கினர். அத்துடன் அவர்களால் இந்நதியை அண்டி தம்மன்னாவ, உபதீசகம, விஜிதகம, அநுராதகம போன்ற குடியிருப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. மேலும் பண்டுவாசுதேவனும் அவனுடைய தோழர்களும் இதற்கண்மையில் உள்ள உபதிஸ்ஸகமத்தில் வைத்து வரவேற்கப்பட்டதாகவும் கூறப் பட்டது. இவ்வாறு இந்நதியை அண்மித்து ஒரு நாகரீகபரவல் ஏற்பட்டமை சிறப்பிற்குரியதாகும்.

உலர்வலயப் பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்கிய நதியாக மல்வத்து ஓயா விளங்குகின்றது. இந்நதியை ஆதாரமாகக் கொண்டே அபயவாவிக் குளத்தை பண்டுகாபய மன்னன் கட்டினான். இதுவே இலங்கை வரலாற்றில் முதலாவது குளமாக குறிப்பிடப்படுவதும் சிறப்புக்குரியதாகும். மேலும் இந்நதியின் மூலம் மகாகணதரவாவி, திசாவாவி, பசவக்குளம், நுவரவாவி, மாகல்கடவாவி, அகத்தி முறிப்புக் குளம், ஏறுவாவி போன்ற குளங்கள் நீரைப் பெற்றமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

இலங்கையின் முதல் தலைநகரான அநுராதபுரம் இந்நதியை பாதுகாப்பு அரணாகக் கொண்டே நிறுவப்பட்டது. அத்துடன் இராசரட்டை யின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கிய நதியாக இந்நதி விளங்குகின்றது. குறிப்பாக தாதுசேன மன்னன் காலம் வரை ஆட்சி செய்த பண்டுகாபயன், தேவநம்பியதீஸன், மகாசேனன் முதலிய மன்னர்கள் இந்நதியை ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்திய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் இந்நதியை அண்டிய பிரதேசங்களில் விவசாய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பு ஏற்பட காரணமாக விளங்கியது. மேலும் தாதுசேனமன்னனால் அமைக்கப்பட்ட புதுமையான கால்வாய் எனப்படும் ஜெயகங்கை கால்வாய் இந்நதியின் இடதுகரையில் முடிவடைவதும் இந்நதியைச் சிறப்படையச் செய்கின்றது.

மேலும் தென்னிந்திய படையெடுப்புக்களும் இந்நதியூடாகவே நாட்டுக்குள் பிரவேசித்தன. இந்நதிக்கரை ஊடாக நகர்ந்து வருவது ஒரு பக்க எதிர்ப்பை சமாளிக்க உதவும் என்பதால் தென்னிந்திய படையெடுப்புக்கள் நடைபெற்றன. எனினும் நீண்ட நதியாக காணப்பட்டதால் இதன் இயற்கை அமைவை வெற்றிகொண்டு அநுராதபுரத்தைக் கைப்பற்றுவது கடினமாக இருந்தது. விஜயபாகு மன்னன் தனது இறுதிப்படையெடுப்பின்போது இந்நதிக்கருகில் தன் படையை அனுப்பியிருந்தான் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறாக சிறந்த நாகரீக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு அரணாக விளங்கிய பெருமை இந்நதி பெற்றுக் கொள்கின்றது.

## 16 சப்பிரகமுவா மாகாணம்

இலங்கையின் நிர்வாக வலையமைப்பில் முதன்மையை பெற்றுக்கொள்ளும் மாகாணங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. சப்பிரகமுவா மகாணம் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி காணப்படுகிறது. பராக்கிரமபாகு மன்னன் தக்கண தேசத்தை ஆசி செய்த காலப்பகுதியில் இப் பிரதேசத்தின் சில பகுதிகள் 'பஞ்ச ஜோஜன' மாவட்டம் என்று அழைக்கப்பட்டதுடன் நீண்டு நிலைக்கக் கூடிய வகையில் பல அபிவிருத்தி நடவடிக்கை களையும் பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்டிருந்தான் எனக் கூறப்படுகிறது.

1521-ம் ஆண்டு விஜயபாகு கொலையின் விளைவாக 3 பெரும் பிரிவாக கோட்டை அரசு சிதைவடைந்தபோது உருவாகிய சீதாவாக்கையின் பெரும்பகுதியும் இறைகமப்பகுதியும் இம்மாகாண நிலத்திணிவுகளில் பரந்திருந்தன. விஜயபாகு மன்னன் இப்பிரதேசத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான். சிவனொளி பாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்குச் செல்லும் யாத்திரிகளின் நலன் கருதி தங்குமிடங்களையும் தானசாலைகளையும் நிறுவி அதன் பராமரிப்புக்கு இப்பிரதேசத்தில் அமைந்திருந்த கீலிமலை என்ற கிராமத்தை தானமாக வழங்கினான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இம் மாகாணம் ஜிம்மநதி என அழைக்கப்படும் ஜின்கங்கை மூலமும் காலதோட்ட நதி என அழைக்கப்படும் களுகங்கை மூலமும் காலதோட்ட நதி என அழைக்கப்படும் களுகங்கை மூலமும் வளமூட்டப் படுகிறது. சிங்கராஜவனம் எனும் அடர்ந்த காட்டுப்பகுதியை தன்னுள் கொண்டிருப்பதனால் மனிதவாழ்விற்கு ஏற்ற இடமாக காணப்படவில்லை எனினும் இரத்தினபுரி இம்மாகாணத்தின் முக்கிய நகராக காணப்படு கிறது. அதாவது இங்கிருந்து பெருமளவான மாணிக்கக் கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு அந்நிய வருமானம் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் இவ் வியாபாரத்தின் மூலம் இலங்கைக்கு இரத்தினதுவீபம் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கண்டியில் தொடர்பு வைத்துக் கொள்ள சப்பிரகமுவா பிரதேசம் அவசியம் எனக்கருதி இப்பிரதேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்தினர். பின்பு ஆங்கிலேயரின் நிர்வாக மாற்றம் காரணமாக இப்பிரதேசம் முக்கியத்துவம் இழந்தது. ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றியதும் இப்பிரதேசம் அவர்களுக்கு பெரிதும் பயன்படவில்லை. 1833-ம் ஆண்டு கோல்புறூக் உருவாக்கிய 5 மாகாண நிர்வாக முறையின் கீழ் இதன் பகுதிகள் மேற்கு, தெற்கு மாகாணங்களுக்குள் உள்வாங்கப்பட்டது.

இம்மாகாணத்தின் முக்கிய நகரான இரத்தினபுரியை தலை நகராக் கொண்டு மத்திய மாகாணம் தென்மாகாணம் என்பவற்றின் சில பகுதிகளை வெட்டி 1889-ல் இம் மாகாணத்தை பிரித்தானியர் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 மத்திய மாகாணம்

மிகத் தொன்மை வாய்ந்த காலத்தில் இருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக விளங்கும் இவ்விடம் இலங்கையின் நவீன மாகாணங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. செங்கடகலை, ஸ்ரீவர்ணபுர எனச் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் கண்டி இராசதானி இங்கு அமைந்திருப்பது இம்மாகாணத்தின் தனிச் சிறப்பு ஆகும். அநுராதபுர பொலநறுவை இராசதானிக் காலங்களில் இது மலையகரட்டை, மலையக மண்டலம் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டது.

ஐரோப்பியர் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தபோது இதன் வரலாற்று முக்கியத்துவம் அதிகரித்தது. அதாவது நாட்டின் மத்திய பகுதியில் காணப்பட்ட இயற்கைப் பாதுகாப்புக்களை அடிப்படை யாக வைத்தே ஆங்கிலேயர் காலம் வரை தனது சுகந்திரத்தை பேணியமை மத்தியமாகாணம் புகழ்பெறக் காரணமாகியது.

மேலும் கரையோரப்பகுதி அந்நிய ஆட்சிக்கு உட்பட்டமையால் பௌத்த சமய தனித்துவத்தை பேணிக்காக்க உதவிய இடமும் இதுவே ஆகும். உபசம்பதா சடங்குகளும் சமய மீள்கட்டமைப்புக்களும் இவ்விடத்தில் ஏற்பட்டதுடன் புத்தரின் புனித பற்சின்னத்தை பாதுகாக்கும் கண்டி தலதாமாளிகை இங்கு அமையப் பெற்றிருத்தலும் இப் பிரதேசத்தினைச் சிறப்படையச் செய்கின்றது.

அநுராதபுர பொலநறுவைக் காலங்களில் முறையற்ற வகையில் ஆட்சி இழந்தவர்களுக்கும் அரசாள அவாக் கொள்வோருக்கும் பெரிதும் வாய்ப்பாக அமைந்த இடமாக மத்தியமாகாணம் விளங்குகின்றது. பராக்கிரமபாகு, வலகம்பா, துட்டகாமினி போன்ற முக்கிய அரசர்கள் போராயத்தங்களை இங்கேயே மேற்கொண்டமையாலும் மத்திய மாகாணம் முக்கிய இடம் பெறுகிறது.

இம் மாகாணத்தில் சிறப்பாக மலைகள், கணவாய்கள், நதிகள், மேட்டுநிலங்கள், நீர்வீழ்ச்சிகள் எனப்பல இயற்கைக் கொடைகள் அமைந்து காணப்படுகின்றது. ஆதிகாலம் தொட்டு அடர்ந்த வனப்பிர தேசமாகக் காணப்பட்டமையால் அநுராதபுர பொலநறுவைக் கால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர போராட்டக்காரர்களை பாதுகாத்த பெருமை இதனைச் சாரும். அத்துடன் விஜயபாகு மன்னன் பாசறை அமைத்துத் தங்கிய வாகிரி கலைக்குன்று மத்திய மாகாணத்தில் அமைந்திருந்தமை சிறப்பாகும்.

ஐரோப்பியர் கரையோரப் பிரதேசத்தை ஆட்சி செய்வதற்கு முன்பாகவே வர்த்தகரீதியாக இப்பிரதேசம் புகழ்பெற்றிருந்தது. பாக்கு, மிளகு, யானைத்தந்தம், மெழுகு, வாசனைச் சரக்குகள், தேன் என்பவற்றை பெற்றுக் கொள்ளுவதற்காக இந்திய, அரேபிய வர்த்தகர்கள் இப்பிரதேசத்துடன் நீண்டகால தொடர்பை வைத்திருந்தனர்.

மேலும் கண்டி இராசதானி புகழ் பெற்ற கலைவடிவத்தை ஆக்கி அளித்தது. அந்தவகையில் ஒரு தனித்துவக்கலை வடிவம் ஏற்பட்ட இடம் என்ற வகையிலும் மத்திய மாகாணம் புகழ்பெறுகிறது. 1765-ம் ஆண்டு ஒல்லாந்தர் படைஎடுத்தபோதும் கண்டியை கைப்பெற்ற முடியாது போனமைக்கு இம் மாகாணத்தில் காணப்படும் பலன கால்வாய் ஊடாக மக்கள் மேற்கொண்ட கொரில்லா போர்முறையே காரணமாகும்.

இவ்வாறாக சிறப்பான பாதுகாப்பு, சிறந்த கலைவடிவம், சமய கலாசார பண்பாடுகள், இயற்கை எழில்கள் பல நிறைந்த இடமாக மத்தியமாகாணம் விளங்குகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

## 18 ஊவா மாகாணம்

இலங்கையின் நவீன மாகாணங்களில் ஒன்றாக விளங்கும் இது மொனராகலை, பதுளை ஆகிய மாவட்டங்களை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் திசைக்கு ஒன்றாகவும் மத்தியிலும் 5 மாகாணங்களை கோல்புறூக் ஏற்படுத்திய போது இது மத்திய மாகாணத்தின் கீழ் வந்தது. பின்பு நிர்வாகப்பரவல், சனத்தொகை வளர்ச்சி காரணமாக தனி மாகாணமாக மாற்றமடைந்த இது. அனைத்து மாகாணங்களுள் மிகச் சிறப்பான வரலாற்றுச் சிறப்பைக் கொண்டுள்ளது.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இது வரலாற்று முக்கியத் துவம் பெற்ற மாகாணமாகக் காணப்பட்டது. அதாவது 1630-ல் இம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணத்தில் உள்ள நந்தனிவெல என்ற இடத்தில் கொன்ஸ்ரைண்டின் சூசா தலைமையில் வருகை தந்த படை 2-ம் ராஜசிங்கனினால் புறங் காணப்பட்டு அத்தளபதி இவ்விடத்தில் இறப்பை தழுவியதுடன் இப்பிரதேசம் 2-ம் ராஜசிங்கனிடமே விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1815-ம் ஆண்டு கண்டி கைப்பற்றப்பட்டபோது இப்பிரதேசம் கண்டியின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. முதற் சுகந்திரப்போரான 1818-ம் ஆண்டு கலகம் இம்மாகாண வெல்லசப் பகுதியில் நிகழ்ந்தது. அதனை அடக்குவதற்கு ஊவாப் பகுதிக்கு ஆளுனராக இருந்த கெப்பட்டிப்பொல என்பவனை ஆங்கிலேயர் அனுப்பி வைத்தனர். அவன் கலகக்காரருடன் இணைந்து செயற்பட்டு ஈற்றில் அக்கலகம் கொடூரமாக அடக்கப்பட்டமையால் இன்றும் ஆங்கிலேயர் ஆட்சியின் நீங்காவடுவாக ஊவா வெல்லஸக் கலகம் பேசப்படுகிறது. இக் கலகம் வாயிலாகவும் இவ் இடம் முக்கியத்துவம் பெறுகிறது.

இம் மாகாணத்தில் இயக்கர்களின் நிர்வாகத் தலைநகராக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படும் 'சிறிஷவத்து' நகரும் அமைந்துள்ளது. அதேசமயம் இவர்கள் ஆண்டிற்கொருதடவை ஒன்று கூடும் தோட்டம் என்று மகாவம்சநூலில் குறிப்பிடப்படும் 'மகாநாகா' தோட்டம் இம்மாகாணத்தில் உள்ள மகியங்கணை என இனங்காணப்பட் டுள்ளது. மேலும் இங்கு வாழ்ந்துவரும் வேடர்களே இலங்கையின் சுதேசமக்கள் என்று குறிப்பிடப்படுவது இம் மாகாணத்தின் வரலாற்றுத் தொன்மைக்கும் மகிமைக்கும் தக்க சான்றாகும்.

புத்தர் பநிநிர்வானம் அடைந்த பின் மும்முறை இலங்கை வந்ததாகவும் ஒரு முறை இம் மாகாணத்தில் காணப்படும் மகியங் கணைக்கு வந்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது. இவ்வாறாக இம் மாகாணம் பல வரலாற்றுச் சிறப்புக்களை கொண்டு காணப்படுகிறது.

1) உழைக்க நேரத்தை எடுத்துக்கொள் அது - வெற்றியின் விலை
2) சிந்திக்க நேரத்தை எடுத்துக்கொள் அது - சக்தியின் விலை
3) விளையாட நேரத்தை எடுத்துக்கொள் அது - இளமையின் இரகசியம்
4) படிக்க நேரத்தை எடுத்துக்கொள் அது - அறிவின் வாயில்
5) நல்லவற்றை புரிய நேரத்தை எடுத்துக்கொள் அது - இன்பத்தின் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 தென் மாகாணம்

இலங்கையில் காணப்படும் 9 மாகாணங்களில் ஒன்றான இம் மாகாணம் கோல்புறூக் குழுவினரின் விதப்புரைகளின் படி 1833-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள இம்மாகாணம் நீண்டகால பாரிய வரலாற்றுத் தொன்மையை உடையது ஆகும்.

இம் மாகாணத்தில் ஜின் கங்கை, நில்வளகங்கை, கிருந்திஓயா, மாணிக்ககங்கை ஆகிய நதிகள் காணப்படுவதுடன் ஆதி ஆரியக் குடியேறிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட மாகாணமாகவும் இது விளங்குகின்றது. அதாவது வனநதி, கரிந்தநதி, கப்பறகந்தநதி, ஆகிய நதிக்கரைகளில் கஜரகாமம், சந்தனகாமம், மகாகாமம் ஆகிய குடியிருப்புக்கள் நிறுவப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை இம் மாகாணத்தின் சிறப்புத்தன்மைக்கு சான்றாகும்.

புகழ் பெற்ற தொன்மை நகரங்கள் அமைக்கப்பட்ட இடமாகவும் அரசுரிமை இழப்போருக்கு அடைக்கலம் புகுவோருக்கு அரசாள அவாக்கொள்வோர்க்கு விடுதலை வீரருக்கு உகந்த பிரதேசமாகவும் இம்மாகாணம் காணப்பட்டது. அதாவது கேசதாது காசியப்பனின் கதிர்காம நகரும், விஜயபாகு அரசனின் ஆரம்பகாலத் தலைநகரம் மகாநாகனால் உருவாக்கப்பட்ட உருகுணைத் தலைநகரமான மகாகமை என்பன இம் மாகாணத்திலேயே உருவாக்கப்பட்டது. துட்டகாமினி எல்லாளனை வெளியேற்றும் செயற்பாடு, விஜயபாகு சோழரை வெளியேற்றும் செயற்பாடு என்பவற்றுக்கு தளமாக அமைந்த வகையிலும் இம்மாகாணம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைக்கு முதல் தொடர்பை ஏற்படுத்திய போர்த்துக்கேய லோறன்சோடி அல்மெய்டா குழுவினர் 1505-ல் கால்பதித்த காலித் துறைமுகம் இம்மாகாணத்திலேயே அமையப் பெற்றுள்ளது. மேலும் பண்டைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு பெரிதும் பயன்பட்ட 'தேவநகர, கொடவாய' ஆகிய இரு முக்கிய துறைமுகங்கள் இங்கு அமைந் துள்ளமை இதன் வரலாற்றுப் பெருமைக்கு தக்க சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நோக்கில் திஸ்ஸமகாராம, கதிர்காமம் முதலான சமய முதன்மை வாய்ந்த தலங்களும் இங்கு காணப்படுகின்றது. சிகிரியா விற்கு நிகரான சுவரோவியங்கள் காணப்பட்ட சிதுல்பவ்வ குன்று இங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குன்றாகும். போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்ய ஆரம்பித்த போது அவர்களால் உருவாக்கப்பட்ட மாத்தறை திசாவனி தற்போதுள்ள தென்மாகாணம், சல்பதிக் கோரனை, களுத்துறை என்னும் பிரதேசங் களை உள்ளடங்கி இருந்தது மேலும் ஒல்லாந்தர்கள் தமது காலிக் கொமாண்டரி என்ற நிர்வாகப் பிரிவிற்குள் தென்மாகாணத்தை உள்ளடக்கி இருந்தன.

பொருளியல் ரீதியாக மிகத்தொன்மைக்காலம் முதல் புகழ் பெற்றிருந்தது. 3-ம் அக்கபோதி காலம் முதல் இப்பிரதேசத்தில் கரையோரப் பகுதிகளில் தெங்குப்பயிர் பிரபல்யம் பெற்றிருந்தது. 2-ம் பராக்கிரமபாகு பாரிய தெங்குத்தோட்ட முயற்சிகளை இம் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இம் மாகாணத்தின் கரையோரப் பகுதியில் கறுவாவும், புகழ்பெற்ற பயிராகக் காணப்பட்டது. கொழும்புதுறைமுகம் ஆங்கிலேயர் விருத்திசெய்ய முன் சர்வதேச வர்த்தகத்துறைமுகமாக காலி விளங்கியமை இம் மாகாணத்தினை சிறப்பிக்கிறது.

## 20 மின்னேரியா

அநுராதபுரத்தில் நிறுவப்பட்ட இக்குளமானது பாரிய குள அமைப்பின் தந்தையாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்த மகாசேனனால் அமைக்கப்பட்டது. வரலாற்று நூல்களில் "மணிகீரவாவி" என அழைக்கப்படும் இக்குளத்தை நிறுவியதன் மூலம் இவன் "மின்னேரி தெய்யோ" என்றும் "ஹீர ரஜ்ஜீகு பண்டாரா" என்று புகழப்பட்டான் என்பதலிருந்து இக்குளத்தின் முக்கியத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

மகாசேனன் சிறுவனாக இருந்தபோது தன் சகோதரனுடன் விளையாடிக் கொண்டிருந்தான் என்றும் அரண்மனைச் சமையற்காரர்கள் அவர்களுக்கு பால் வழங்கியபோது அது சுவையாக இருந்தமையால் பசு புல் மேய்ந்த இடத்தினை சமையற்காரர் வாயிலாக அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசேனன் அரசனாக வந்த பிற்பாடு அவ்விடத்தில் இக்குளத்தை நிறுவினான் என கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இக்குளமானது வசப மன்னனுடைய குளங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் பெரிய குளமாக காணப்படுவதுடன் இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது பாரிய குளமாகவும் விளங்குகின்றது. அநுராதபுரத்தின் நீர்த்தேவையை பூர்த்தி செய்யவே இவன் இக் குளத்தை நிறுவி இருந்தான். அத்துடன் இதற்கு பெருமளவு மனித உழைப்பையும் பயன்படுத்தியிருக்க முடியும் எனக் கருதப்படுகிறது. இன்றும் பெருமளவு பிரதேசங்களின் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு இக்குளம் பயன்படுத்தப்பட்டு வருதல் சிறப்பம்சமாகும்.

மகாவலிகங்கையின் ஒரு கிளையாறு மூலம் பெறப்பட்ட நீரினையும் தரையுயரு சிறப்புக்களை தெரிவுசெய்தும் இக்குளத்தை நிறுவி இருந்தான். பராக்கிரமபாகு மன்னன் காலம் எலஹேரவை தலைமை இடமாகக் கொண்டு விருத்தி செய்யப்பட்ட நீர்ப்பாசன முகாமைத்துவத் தின் கீழ் இக்கால்வாய் மூலம் நீரினைப் பெற்று வளமான குளமாக மாறியதுடன் இராசரட்டைப் பகுதியின் அபிவிருத்திக்கு பெரும்பங்கை ஆற்றியும் இருந்தது.

இன்றைய தொழில்நுட்பவியலாளரும் வியந்து போற்றத்தக்க இந்தப் படைப்பை மகாசேன மன்னன் கால தொழில்நுட்பவி யலாளர் ஆற்றியிருந்தமை சிறப்பாகும். 4670 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இக்குளம் எலஹேர மின்னேரியா கவுடுலு இணைந்த பெரும் நீர்ப்பாசன முறையின் தலைமை நிலையமாக விளங்கிய சிறப்பினையும் பெறுகிறது.

அநுராதபுர சிங்கள மக்களால் போற்றப்படும் அளவிற்கு மகாசேனனுக்கு பெரும் கீர்த்தியை ஏற்படுத்தியது இக்குளமே ஆகும். சமய வன்கொள்கைகள் காரணமாக மக்கள் மத்தியில் பெற்ற அவப்பெயரை போக்க மகாசேனனுக்கு உதவியது மின்னேரியா ஆகும். நீர்ப்பாசனத்தின் பொருட்டு எம்மன்னரும் ஆற்றாத பெருஞ்சேவையை ஆற்றிய பெருமை இவனையே சாரும்.

தொகுப்பாசிரியர்:-

**அமரர் V. S. கஜேந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

வினாசித்தம்பி + வள்ளிப்பிள்ளை ↓ சோகேஸ்வரன்

வாரித்தம்பி + இராசம்மா ↓ நாகரஞ்சினி

சோகேஸ்வரன் + நாகரஞ்சினி ↓

**கஜேந்தன் (கஜன்)**

ஜெனந்தன் (கரன்)

துவாரகா (துஷா)

துவாரகன் (டனு)

தரணிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்


நாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து
நெறிநின்று
மேநிலையில் எம்மை ஆக்கிவைத்து
மேதினியில்
நாம் வாழ நனிசெய்த எம்தெய்வம்
எமைவிடுத்து
விண்ணேகிப் போன அந்நாளில்
விதிர்விதிர்த்து
கண்ணீரில் கரைந்து கலங்கி நின்றோம்
அந்நேரம்
ஓடோடி வந்துதவி செய்தோர்கள்
உணர்வோடு ஆறுதலை நவின்றோர்கள்
அஞ்சலிகள் ஈந்திட்ட அன்பர்கள்
ஆனபணி பலசெய்த அயலோர்கள்
தொலைத்தொடர்பு ஊடகங்கள் வாயிலாக
துயரில் கலந்துகொண்ட உயர்வோர்கள்
மாத நிறைவுக் கிரியைகளை
மலர்வாய் நடத்தி வைக்கும் குருமார்கள்
கலந்து சிறப்பிக்கும் தூயவர்கள்
இம்மலரை
ஆக்கியோன் அச்சமைத்தோர் அனைவரதும்
பயன்தூக்கா நல்லுதவி நயன் தூக்கி
நன்மைக் கடலிற் பெரிது எனும்
வள்ளுவத்தின் வாய்மை தனை உணர்ந்து
உளங்கனிந்த நன்றி உவந்தளித்தே.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org